இலங்கையில் செய்திப் பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டது. Registered as a Newspaper at the G.P.O

www.padippakam.com


# புதிய கண்ணோட்டம்

PUTHIYA KANNOTTAM

පුදිය කණ්ණෝට්ටම්

வெளியீடு: 30 | 15 புரட்டாதி 1996 | விலை: ரூபா 7.00


## அரசின் யுத்தச்செலவு 5000கோடி ரூபாய்!
## மானியங்கள் வெட்டு!
## பாண், சீனி, பருப்பு போன்ற அடிப்படை உணவுப் பொருட்களின் விலை உயர்வு!
## வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு!
## பொருளாதார நெருக்கடிக்குள் அரசு!
## யுத்தத்தை வெறுக்கும் மக்கள்!
## யுத்தசன்னதம் கொள்ளும் அரசும் புலிகளும்!

## தீர்வு கிட்டுமா?

அரசின் யுத்தச் செலவு ராக்கெட் வேகத்திலும் விட பல மடங்கு அதிகரித்துச் செல்கிறது. மக்கள் முன்னணி அரசு பதவிக்கு வரும்போது 2500 கோடி ரூபாவாக இருந்த யுத்தச் செலவு 2வருடத்துள் சரி அரைவாசி அதிகரித்து 5000கோடியாக அதிகரித்துள்ளது. உற்பத்தியின் 25வீதம் யுத்தச்செலவினங்களுக்குப் போவது பொருளாதாரத்தையே நெருக்கடிக்குள்ளாக்கியுள்ளது.

இதனால், அரசு இதுவரை கொடுத்துவந்த பல்வேறு மானியங்களையும் வெட்டிக்குறைக்க வேண்டிய சூழ்நிலை அரசுக்கு வந்துள்ளது. மா, உரம், சுகாதார வசதிகள், கல்வி, சமுர்த்தி போன்றவற்றிற்கு கொடுக்கப்பட்டு வந்த மானியங்கள் வெட்டப்படும் சூழ்நிலை தோன்றி வருகிறது.

3ரூபா 50சதம் விற்ற பாண் 7ரூபாவாகவும், 24ரூபா விற்ற மைசூர் பருப்பு 44ரூபாவாகவும் விலை அதிகரித்துள்ளது. இதே போல் பால்மா உட்பட பல பொருட்கள் விலையேற்றப்பட்டு வருகின்றன. மக்களுடைய வாங்கும் சக்தி குறைந்ததால் வியாபாரம் முடக்கப்பட்டு வருகின்றது. கொழும்புச் சந்தை தூங்கத் தொடங்கி விட்டதாகவே வர்த்தகர்கள் அபிப்பிராயப்படுகின்றார்கள்.

அரசின் யுத்தச் செலவுகள் ஒருபக்கம், புலிகளின் பொருளாதார நிலைகளின் மீதான தாக்குதல்கள் என்பன அரசுக்கு நெருக்கடிகளை தோற்றுவித்துள்ளது. மத்திய வங்கி குண்டு வெடிப்பிலும், எண்ணைக் குதங்கள் மீதான தாக்குதலிலும் அரசு பல ஆயிரம் கோடி ரூபாய்களை இழந்துள்ளது.

இவைதவிர, இராணுவ ரீதியிலும் முல்லைத்தீவு போன்ற பாரிய இழப்புக்களும் ஏற்பட்டுள்ளன.

இதேசமயம் புலிகளும் கூட, குடாநாட்டை இழந்ததன் மூலம் தமது பெருமளவிலான நிதி ஆதாரத்தை இழந்துள்ளார்கள். மண்மீட்பு நிதி, ஏவுகணை நிதி, ஆட்டிலறி நிதி என தமிழ் மக்களும் பிழிந்தெடுக்கப்பட்டு விட்டார்கள். அவர்கள் ஒருபுறம் புலிகளுக்கு பல வழிகளிலும் வரிகட்ட வேண்டிய அதேசமயம், அரசுக்கும் யுத்த வரி கட்டவேண்டியவர்களாக இருபகுதியினராலும் மிதிக்கப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

இராணுவ ரீதியில் முல்லைத் தீவு முகாம் போன்ற சில தாக்குதல்கள் நடைபெற்றாலும், இதன் மூலம் பலநூறு ஆயுதங்களை அவர்கள் எடுத்தாலும் கூட, இவை புலிகளின் வீரத்திற்கு ஒர் அடையாளமாக இருந்தாலும் கூட இத்தாக்குதல்கள் மூலம், புலிகள் தமிழ் மக்கள் மத்தியில் இழந்துவரும் ஆதரவினை மீளப் பெற்றுவிட முடியாது.

யாழ்ப்பாணத்தையும், கிளிநொச்சியையும் காப்பாற்ற முடியாத சூழ்நிலையில் தான் புலிகள் உள்ளார்கள் என்பதை மக்களறிவர். ஆங்காங்கே, இராணுவத்தையும், பொலிசாரையும், பொதுமக்களையும் கொலை செய்வதன்மூலம் புலிகள் தமது இருப்பை காப்பாற்றிக்கொள்ளலாமே தவிர, தமிழீழத்தை பெற்றுவிட முடியாது.

யாழ்ப்பாண மக்கள் இடம் பெயர்ந்து மீளக்குடியேறினார்கள். மக்கள் திரும்பிப் போவது புலிகளுக்கு விருப்பமில்லாமல் இருந்தும் கூட, மக்கள் அவர்களை ஒதுக்கிவிட்டு யாழ்ப்பாணம் சென்றார்கள்.

இன்று கிளிநொச்சியில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் ஒன்றில் வவுனியா வந்து யாழ்ப்பாணம் போக விரும்புகிறார்கள்; இல்லையேல் மன்னாருடாக இந்தியா போக விரும்புகின்றார்களே ஒழிய புலிகளின் கட்டுப்பாட்டில் வாழ விரும்பவில்லை.

இந்நிலையில் அரசு எவ்வளவு தூரம் பொருளாதார நெருக்கடிக்குள் உள்ளதோ, அதேஅளவு பல்வேறுபட்ட நெருக்கடிகளுக்குள்ளும் புலிகளும் உள்ளது. ஆனால் இந்த யதார்த்தங்கள் இவர்களால் உணரப்பட்டும், இவர்கள் யுத்த வெறிகொண்டவர்களாக இருப்பதுதான் வேதனைக்குரியது.

35வருடங்களாக போர் புரிந்த பாலஸ்தீன விடுதலை இயக்கம் இஸ்ரேலுடன் பேசி வருகிறது. 25வருடமாக யுத்தம் புரிந்த மோரோ தேசிய விடுதலை இயக்கம் பிலிப்பைன்ஸ் அரசுடன் பேசி தீர்வொன்றிற்கு வந்துள்ளது. நூற்றுக்கணக்கான வருடம் போராடிவரும் ஐ.ஆர்.ஏ பிரிட்டிஷ் அரசுடன் பேசுகின்றது. பேசவே மாட்டோம் என இனவெறிபிடித்த ஆபிரிக்க வெள்ளை அரசு பேச்சுவார்த்தைகள் மூலம் பிரச்சினைகளை தீர்த்து கறுப்பின மக்களிடம் ஆட்சி அதிகாரத்தை ஒப்படைத்திருக்கிறது. அப்படியானால் புலிகளால் ஏன் இந்த யுத்தத்தை நிறுத்த முடியாது.

அழிவுகள் இடப்பெயர்வுகள், துன்பங்கள், துயரங்கள் இவற்றை ஏன் புலிகள் உணரக் கூடாது? யாருடைய விடுதலைக்காகப் போராடுகின்றோம் என்று கூறுகின்றார்களோ அந்த இனம், அழிக்கப்பட்டும், மோசமாகப் பாதிக்கப்பட்டும் வருவது இவர்களுக்கு தெரியவில்லையா?

ஏற்கனவே 5இலட்சம் மக்கள் அகதிகளாகி வெளிநாடுகளில் வாழ்கின்றார்கள். தமிழீழம் கிடைத்தாலும், இதில் பெரும்பான்மையோர் தாயகம் திரும்பப் போவதில்லை. இந்நிலையில் யுத்தம் நீடித்தால், மிச்சம் மீதியாக உள்ளவர்களும், அகதிகளாகவும், அழிந்தும் போவதைத் தவிர வேறெதுவும் ஏற்படப்போவதில்லை. இவற்றை புலிகளும் அரசும் புரிந்து கொண்டு யுத்த நிறுத்தம் பேச்சுவார்த்தைக்கு முன்வர வேண்டும். ●

### புதியகண்ணோட்டத்திற்கு புலிகளின் பார்சல் குண்டு

12.09.96 வியாழக்கிழமை காலையில் ஈ.பி.ஆர்.எல்.எவ். மட்டக்களப்பு பிராந்திய அலுவலகத்திற்கு பதிவுத் தபால் கடித உறை ஒன்றினை தபால்காரர் கொடுத்துவிட்டுப் போனார். அதனைப் பெற்றுக் கொண்ட அலுவலகப் பொறுப்பாளர் கடித உறையை கவனித்திருக்கிறார். சற்றுத் தடிமனாக இருந்திருக்கிறது. "சிறுகதைப்பகுதி புதியகண்ணோட்டம்" என்று குறிப்பிட்டு கீழே மட்டக்களப்பு அலுவலக முகவரி எழுதப்பட்டிருந்தது. களுவாஞ்சிக்குடி அஞ்சலக முத்திரையும், பெற்றுக்கொண்டதற்கான மட்டக்களப்பு தபாலக முத்திரையும் இடப்பட்டிருக்கிறது. அனுப்பியவரின் முகவரி இல்லை. சந்தேகம் ஏற்பட்டதால் கடிதத்தை வழமையான முறையில் பிரிக்காமல் எச்சரிக்கையுடன் திறந்து பார்க்கப்பட்டது. உள்ளே குண்டு இருப்பதை நிச்சயப்படுத்திக் கொண்டு, குண்டு செயலிழக்க வைக்கும் பிரிவிற்கு தகவல் சொல்லப்பட்டது. குண்டு செயலிழக்கச் செய்யும் கருவிகள் சகிதம் அலுவலகத்திற்கு வந்த குண்டு செயலிழக்க வைக்கும் பிரிவினர், கடித உறையை சனநடமாட்டமற்ற ஆற்றங்கரைப் பகுதிக்கு எடுத்துச் சென்றனர். அங்கு கடித உறையைத் திறக்கும்போது அஜாக்கிரதையாக செயற்பட்டதன் விளைவாக, தவறுதலாக குண்டு வெடித்தது. வெடிகுண்டு செயலிழக்கச் செய்யும் பிரிவைச் சேர்ந்த செனவிரத்ன என்பவர் கைவிரல்கள் சிதறிய நிலையில் மட்டக்களப்பு இராணுவ மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

படிப்பகம்

# கண்ணோட்டம்

## முத்தரப்பு பேச்சு வேண்டும்

பாராளுமன்ற தெரிவுக் குழுவில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் அரசியல் நகல் திட்டம் தொடர்பான விவாதம் தொடர்ந்து நடக்கும் அதேசமயத்தில், 1997 ஏப்ரல் மாதத்தின் முன் இந்நகல் சட்டமூலத்தை பாராளுமன்ற வாக்கெடுப்புக்கு சமர்ப்பிக்கப்போவதாக அரசியல் விவகார அமைச்சர் பேராசிரியர் பீரிஸ் அவர்கள் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் அங்கம்வகிக்கும் சில பாராளுமன்ற உறுப்பினர் களின் கருத்துப்படி, இதுவரை எந்த ஓர் பிரச்சினைக்கும், இறுதியான தீர்வு இத்தெரிவுக்குழுவில் ஏற்படவில்லை ஒவ்வொரு விடயங்களை எடுப்பதும், அவற்றை விவாதிப்பதும், அவற்றுக்கு தீர்வுகாணாமல் மற்ற விடயத்தை எடுப்பதாகவுமே தெரிவுக்குழு நடைமுறை அமைந்து வருகிறது. இதுதவிர தெரிவுக்குழுக் கூட்டங்களுக்கு கோரம் போதாமையால் பாராளுமன்ற உறுப்பினர் களை தேடி பாராளுமன்றக் 'கன்ரீன்'களுக்கும், நூல் நிலையங்களுக்கும் அலையும் அவல நிலையும் உள்ளது.

இவற்றுக்கு அப்பால் இவை அரசியல் சாசனத்தில் இணைக்கப்பட வேண்டுமாயின் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை வாக்குகள் பாராளுமன்றத்தில் தேவை. ஆனால, மக்கள் முன்னணி அரசுக்கு ஓர் உறுப்பினர் பெரும்பான்மையே உள்ளது. எதிர்க்கட்சியில் இருக்கக்கூடிய தமிழ்க்கட்சிகள் இணைந்தாலும் கூட மூன்றில் இரண்டு பெரும்பான்மையை பெற்றுக் கொள்ள முடியாது. யு.என்.பி. இதனை எதிர்த்தே வருகின்றது. இந்நிலையில் பாராளுமன்றத்தில் இதனைச் சமர்ப்பிப்பதன் மூலம் அரசு தனது நம்பகத் தன்மையை உணர்த்தலாமே தவிர, இதனால் ஆகப்போவது எதுவுமில்லை என்பதே உண்மை.

இதேசமயம், தமிழ், முஸ்லிம் கட்சிகளின் ஆதரவையும் இதற்குப் பெற அரசு முயற்சி செய்து வருகின்றது. ஆனால், இன்று பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் இருக்கும் அரசியல் நகலைப் பொறுத்தவரை அது முழுமையாக தமிழ்மக்களின் அபிலாஷைகளை பூர்த்தி செய்யும் ஆவணம் அல்ல. மாறாக 1995ஆகஸ்ட் 3ல் முன்வைக்கப்பட்ட ஆலோசனைகள் கூட சிறிது மாற்றப்பட்டு, இல்லையேல் குறைக்கப்பட்டே அரசியல் நகலாக முன்வைக்கப்பட்டது. இது அரசு தயாரித்த ஆவணம் மாத்திரமே. தமிழ் மக்களின் பிரச்சினைகளை தீர்க்கவென தயாரிக்கப் பட்ட இந்த ஆவணம், தமிழ் தரப்பில் யாருடனும் கலந்தாலோசிக்காமல் தயாரிக்கப்பட்டதாகும். எனவே இதனை செழுமைப்படுத்துவதன் மூலம் தமிழ் மக்களின் அபிலாஷைகளை பூர்த்தி செய்யலாம் என்ற அடிப்படையில், இச் சட்டநகலை திருத்துவதற்கான சில ஆலோசனைகளை 5 தமிழ் கட்சிகள் கூட்டமைப்பானது (ஈரோஸ், ஈ.பி.ஆர்.எல்.எவ், ஈ.பி.டி.பி, ரெலோ, புளொட்) பாராளுமன்றத் தெரிவுக்குழு முன் வைத்தது. ஆனால், எமது திருத்தங்கள் இதுவரை ஆலோசனைக்கெடுக்கப்படவில்லை என்றே தெரிகிறது.

இந்நிலையில் அரசு பாராளுமன்றத்துக்கு கொண்டுவர இருக்கும் அரசியல் நகல் எந்த வடிவத்தில் இருக்கும் என்பது புரியாத புதிராகவே உள்ளது. அரசு உண்மையாகவே இனப்பிரச்சினையை தீர்க்க விரும்பினால் அரசு செய்யக்கூடியது இது ஒன்றுதான்:

அதாவது பிரச்சினையுடன் சம்பந்தமான முத்தரப்பு பேச்சுவார்த்தை ஒன்று ஆரம்பிக்கப்பட வேண்டும். அரசு, தமிழ்கட்சிகள், முஸ்லிம் கட்சிகள், இவற்றை உள்ளடக்கிய பேச்சுவார்த்தை மூலம் சகலரது அபிலாஷைகளையும் உள்ளடக் கக்கூடிய தீர்வுப்பொதி ஒன்று உருவாக்கப்பட வேண்டும். இத்தீர்வையும் கூட யு.என்.பி. ஏற்றுக்கொள்ளும் என்பதில்லை. அவர்களும் சிங்கள இனவாதிகளும் இவற்றை எதிர்க்கவே செய்வார்கள். ஆனால், தமிழ், முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவுடன் இதனைப் பாராளுமன்றத்தில் நிறைவேற்றலாம். அதேசமயம் குறைந்தபட்சம் யு.என்.பி. இல் இருக்கும் சிறுபான்மை அங்கத்த வர்களின் ஆதரவையும் இதற்கு திரட்ட முயலலாம். அப்பொழுதும் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகள் கிடைக்காத பட்சத்தில், இது தொடர்பான மக்களின் கருத்தறியும் ஓர் வாக்கெடுப்பை நடத்தலாம். இவ்வாக்கெடுப்பில் 50வீதத்திற்கு மேற்பட்ட மக்கள் இத்தீர்வுப்பொதிக்கு ஆதரவாக வாக்களித்தால், பின்னர் யு.என்.பி. இதற்கு வாக்களிக்கும் நிலைக்கு தள்ளப்படலாம். இதன் மூலம் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை பெற்று இதன்னை சட்டமாக்க முடியும்.

50வீதத்திற்கு மேற்பட்ட மக்கள் தீர்வுப்பொதிக்கு ஆதரவளித்தால் நீதியான நியாயமான தீர்வொன்றிற்கு அவர்கள் ஆதரவளிக்கின்றார்கள் என்பதே இதன் அர்த்தமாகும். அது மாத்திரமல்ல இந்நாட்டில் அமைதி, சமாதானம் ஏற்படுத்துவதற்கும் அவர்கள் தமது ஆதரவை அளிக்கிறார்கள் என்பதே இதன் அர்த்தமாகும். எனவே, மேற்கண்ட விடயங்களை கவனத்திலெடுத்து ஓர் முத்தரப்பு பேச்சுவார்த்தை ஒன்றை நடாத்தி, ஏற்றுக் கொள்ளக் கூடிய தீர்வுப் பொதியொன்றை உருவாக்க அரசு தன்னாலான சகல நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டுமென ஈ.பி.ஆர்.எல்.எவ். கோருகின்றது.




## விலங்கு மனிதர்களும் ஊமைச் சிந்தனைகளும்!



சப்பித்துப்ப வேண்டும் போலிருக்கிறது
மனிதர்களை....
அவர்களின் வாசற்படிகளில் போய்
உட்காருவதற்குக் கூட மனசு கூச்சப்படுகிறது!
நேற்றைய தெருக்கள் நெடுகிலும்
கைகோர்த்துத் திரிந்த என்னையும், அவனையும்
வானமும், பூமியுமாக்கிய
அவர்களின் வாசற்படிகளில் உட்கார மனசு கூசுகிறது....

ஊமையாய்த் திரிகின்ற விலங்குகளைவிட
மனிதர்கள்தான் அதிகம்....
நேசமும், பாசமும் போர்த்த வேண்டிய மேனிகளை
சொறித்தனமும், சுயநலமுமாக....

என்னை நஞ்சுவைத்துக் கொல்லுங்கள்....
கலப்படக்காரனின் கைகளுக்குள் அகப்படாத
பவுடரைப்போல நான் மட்டும் எப்படி...?
ஆகவே -
சுத்தமான மனிதர்களைத் தெரிவுசெய்ய
விலங்குகளை மத்தியஸ்தர்களாக்க வேண்டும்....
பொறாமை, நயவஞ்சகம், அரக்கத்தனம்
சொப்பனத்தில் கூட தொட்டுப் பார்க்காத
நாய், பூனை, முயல், மான்கள்....

கொக்கட்டிச் சோலையின் முதுகில்....
காத்தான்குடிப் பள்ளிகளின் முகத்தில்....
தெஹிவளையின் ஈரல்குலையில்....
ஈட்டியால் குத்திய,
உப்புப் போட்ட நிகழ்வுகளும்
சுருங்கிப் போன சிந்தனைகளுமாக....

மனிதர்களை சப்பித்துப்ப வேண்டும் போலிருக்கிறது....
கடைசியாக ஒருமுறை விண்ணப்பிக்கிறேன்....
தமிழனாக, முஸ்லிமாக, சிங்களவனாக-
தனித்தனி அடையாள அட்டைகளை புதுப்பிக்காமல்
"மனிதன்" அடையாளத்தோடு -
காலத்திற்கு அறிமுகமாகுங்கள்.

ஈ. எம். ஆப்தீன்

### தோழர்களே, நண்பர்களே, வாசகர்களே!

உங்களிடமிருந்து அபிப்பிராயங்கள், விமர்சனங்கள், ஆலோசனைகளையும், ஆக்கங்களையும் புதியகண்ணோட்டம் வரவேற்கிறது. அனுப்ப வேண்டிய முகவரி:

**புதியகண்ணோட்டம்,
த.பெ.இல: 442,
கொழும்பு**

புதியகண்ணோட்டம் தொடர்பான அனைத்து நேரடித் தொடர்புகளுக்கும்:

29A, வாவிக்கரை வீதி-I,
மட்டக்களப்பு.
☎ 065-2398

54, மாணிக்கவாசகர் வீதி,
திருகோணமலை.
☎ 026-22858

22, வெளிவட்ட வீதி,
வவுனியா.
☎ 024-22070

மன்னார்
☎ 023-2370

**வெளிநாட்டு முகவரிகள்:**

Post Bag: 1041,
Madras-17,
India.

B.M.Box: 1738,
London-WCIX-3NN,
U.K.

P.Box: 6800,
Agincourt,
Ont-MIS3C6,
Canada.

E.P.I.C
Box No: 95,
95144, Garges Les,
Gonnesse Cedex,
France.

P.Fach: 100206,
44002 Dortmund,
Germany.

P.Fach: 506,
Bern-17,
Switzerland.

www.padippakam.com





# வவுனியாவிலிருந்து... உள்ளமுறுத்துரையர்

இராணுவத்தின் 'சத்ஜெய' இராணுவ நடவடிக்கையின் பின்னர் வன்னிப் பெருநிலப்பரப்பில் இருந்து பெருந் தொகையான மக்கள் அகதிகளாக வவுனியா இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள் வரத் தொடங்கியுள்ளார்கள்.

அரசு, இவ்வாறு வரும் மக்களை தங்க வைப்பதற்கென 26 பாடசாலைகளை ஒழுங்கு செய்துள்ளது. ஏற்கனவே வவுனியாவிற்குள் வந்துவிட்ட ஆயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் நெலுக்குளம் பாடசாலையில் தங்கவைக்கப் பட்டுள்ளனர்.

அவர்கள், தமது இதுவரையிலான வாழ்க்கையில் சந்திக்காத துயரங்களையெல்லாம் தாங்கி வந்திருக்கிறார்கள். ரூபவாகினி தொலைக்காட்சி, இவ்வாறு வரும் அகதிகளுக்கு வவுனியாவில் சிறந்த வசதிகள் செய்து கொடுக்கப்படுவதாக விளம்பரப்படுத்தியது.

ஆனால் அவர்கள் அனுபவிக்கும் துயரங்கள் வார்த்தைகளால் வடிக்க முடியாதவை.

## அரைகுறை மனத்துடன் அத்தியாவசியப் பொருட்கள்

சத்ஜெய இராணுவ நடவடிக்கையின் விளைவாக கிளிநொச்சி உள்ளிட்ட ஏறத்தாழ 7 கிலோமீற்றர் பரப்பளவில் வாழ்ந்த மக்கள், கிளிநொச்சிக்குத் தென்மேற்கே மல்லாவி, துணுக்காய், வவுனிக்குளம் போன்ற பகுதிகளுக்கும், வடகிழக்கே புதுக்குடியிருப்பு போன்ற இடங்களுக்கும் இடம்பெயர்ந்துள்ளனர்.

முல்லைத்தீவு, கிளிநொச்சி அதன் அயல் பகுதிகள் தவிர்ந்த ஏனைய இடங்களில் வீட்டு வசதியோ, குடிநீர் மற்றும் சுகாதார வைத்திய வசதிகளோ மிகக் கீழ்மட்ட நிலையிலேயே காணப்படும் இவ்விடங்களுக்கு, ஏற்கனவே சூரியக்கதிர் 1, 2 இனால் ,இடம் பெயர்ந்தவர்களும், புதிதாகக் கிளிநொச்சியில் இருந்து இடம்பெயர்ந்தவர்களும் செல்லும் போது உயிர் வாழ்க்கை என்பதே பெருஞ் சவாலாக மாறிவிட்டது.

இதற்கிடையே ஜுலை 11ந் திகதியிலிருந்து ஆகஸ்ட் 11ந் திகதிவரை, கூரை மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் எதுவும் வவுனியாவிற்கப்பால் அனுப்பப்படவில்லை.

11ந்திகதியிலிருந்து மிக மெதுவாக அத்தியாவசியப் பொருட்கள் வன்னிப் பெருநிலப் பரப்புக்கு அனுப்பப்படுகின்றன. சராசரியாக 15 லொறிகளுக்கு மேல் செல்வதில்லை.

விருப்பமின்மையுடன், அரைகுறை மனத்துடன் அனுப்பப்படும் இந்த அத்தியாவசியப் பொருட்கள் வெள்ளமெனத் திரண்டிருக்கும் அகதிகளின் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாதவை.

சாதாரண காலங்களிலேயே நாளாந்தம் 100 இற்கு மேற்பட்ட லொறிகள் வன்னிப் பெருநிலப்பரபுக்கு செல்கின்றன. வரலாறு கண்டிராத நெருக்கடியை எதிர்நோக்கியிருக்கும் வன்னிப் பெருநிலப்பரப்புவாழ் மக்களின் தேவைகளுக்கு தற்போது அனுப்பப்படும் உணவு எம்மாத்திரம்? (அதிலும் கணிசமான பகுதி புலிகளால் அபகரிக்கப்பட்டு விடும்.)

## உயிரைக் கையில் பிடித்தபடி ஓடுகின்ற மக்கள்

வன்னிப் பெருநிலப்பரப்பில் பெயர் சொல்லுமளவிற்கு ஒரு வைத்தியசாலை இருந்ததென்றால் அது கிளிநொச்சி வைத்தியசாலை தான். ஏற்கனவே சர்வதேச விதி முறைகளுக்கப்பாற்பட்ட குண்டு வீச்சுக்ளால் சிதிலமாகிப் போன அந்த வைத்தியசாலை வெறிச்சோடி விட்டது. வைத்தியசாலை மல்லாவிக்கு மாற்றப்பட்டுள்ளது.

ஆனால் அத்தியாவசியமான மருந்துகள் அங்கு அறவே இல்லை. 3 மாதத்திற்கொரு முறை கோட்டாவாக வழங்கப்படும் மருந்துகள் கூட கடந்த ஒருவருடத்திற்கு மேலாக வழங்கப்படவில்லை.

ஐ.சி.ஆர்.சி., யு.என்.எச்.சி.ஆர். மற்றும் அரசு சார்பற்ற தொண்டர் நிறுவனங்களின் செயற்பாடுகள் கூட முடக்கப்பட்டுவிட்டன. அக்கராயன் பகுதியில் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் தனது சேவையினைச் செய்கிறது.

தற்போது மக்கள் தஞ்சமடைந்திருக்கும் பகுதிகள் திட்டமிட்டு, தலைமுறை தலைமுறையாக அபிவிருத்தி செய்யப்பட்ட பகுதிகள் அல்ல.

குடிநீரும் இங்கொரு பூதாகரப் பிரச்சினை. உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இருப்பிடம், குடிக்கத் தண்ணீர், நோய்க்கு மருந்து இவற்றைப் பெறுவது ஒரு மனிதனின் அடிப்படை உரிமை. ஆனால் காற்றைத் தவிர மற்றவை எல்லாம் யுத்தசன்னதத்தாலும், குரோதங்கள் வக்கிரங்களாலும் மக்களுக்குக் கிடைக்காமல் செய்யப்பட்டுள்ளன.

யுத்தத்தால் சிதைவு. பட்டினியால் இறப்பு. நோயால் மரணிப்பு.

எங்கே செல்கிறோம் என்று அவர்களுக்குத் தெரியாது. ஆனால் அவர்கள் ஓடிக் கொண்டும், அடர் காடுகளில் மர நிழல்களில் வானமே எல்லையாக தரித்துக் கொண்டுமிருக்கிறார்கள். பனி, வெயில், மழை, புயல், எல்லாம் அவர்களை நேரிடையாகத் தாக்குகின்றன. யுத்தம்! கொடிய யுத்தம், அவர்களை இந்நிலைக்குள் தள்ளியுள்ளது.

## இறுகிய முகங்களா இதயங்களை வெல்லும்?

இவ்வாறு அலைந்து, தாங்கமுடியாத மனச்சுமையுடன் வரும் மக்களை வவுனியாவில் இன்முகத்துடன் வரவேற்கவில்லை.

அவர்கள் பெருநிலப்பரப்பில் ஆதிக்கம் செலுத்துவோருக்கு கட்ட வேண்டிய கப்பம் எல்லாம் கட்டி, அவர்களின் விடுதி வாடகை எல்லாம் கட்டி, தாண்டிக்குளத்திற்கு வந்தால், அவர்கள் விறைத்த துப்பாக்கியுடன் இறுகிய முகம் கொண்ட இலங்கை அரசின் பாதுகாப்புப்படைகளை சந்திக்கிறார்கள்.

முண்டியடிக்கும் மக்களை அவர்கள் தள்ளுகிறார்கள். மக்களின் இதயங்களையும் மனங்களையும் இப்படித்தான் அரசு வெல்கிறது. ஒருசிலரை உள்ளே அனுமதித்தபின், மற்றவர்களுக்குச் சிவப்புக்கொடி காட்டப்படுகிறது. தாண்டிக்குளத்திற்கும் ஓமந்தைக்கும் இடையே நடை பயில்வதிலேயே ஆயிரக் கணக்கானோருக்கு காலம் போகிறது. புழுதி படிந்த காய்ந்து கறுத்த உடலும், கலைந்த கேசமுமாக மக்கள் அலைகிறார்கள்.

ஈவிரக்கமற்ற அரசு யந்திரத்தின் பகுதி, அவர்களை எலும்பும் தசையும் உணர்ச்சியுமுள்ள மனிதர்களாகப் பார்க்கவில்லை.

## உள்ளே ஆட்டுத் தொழுவம் வெளியே வெண்துணி விரிப்பு

குடும்பம் இங்கு சிதைபடுகிறது. ஒரு குடும்பத்தில் 33 வயதுக்கு மேற்பட்டவர்களும், 13 வயதுக்குட்பட்டவர்களும் மாத்திரம் பிரம்ம பிரயத்தனத்தின் பின்னர் உள்ளே வர அனுமதிக்கப்படுகிறார்கள். இந்த வயதுகளுக்கு இடைப்பட்ட பிரிவினர் தீவிர விசாரணைக்குட் படுத்தப்பட்டே உள்ளே அனுமதிக்கப்படுகிறார்கள். ஆனால் சகலரும் விசாரிக்கப்படுகிறார்கள். அதற்காக தாண்டிக்குளத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் தடுத்து வைக்கப் படுகிறார்கள்.

அகதிகள் ஒரு தனி வரிசை, பயணிகளுக்கு ஒரு வரிசை, வியாபாரிகளுக்கென ஒரு வரிசை என முடிவிலா வரிசைகளும், குளறுபடிகளும் அங்கு காணப்படுகின்றன.

ஆனால் 'சத்ஜெய'விற்குப் பிறகு வந்த பயணிகளில் பல்கலைக்கழக, பாடசாலை மாணவர்கள், வேறு இடங்களில் தொழில் புரிவோர் எல்லோரும் புதிதாக ஆரம்பிக்கப் பட்ட நெலுக்குளம் அகதி முகாமிற்கு கொண்டு வரப்பட்டார்கள்.

பயணிகளுக்கென பிரத்தியேகமான வேப்பங்குளம் ரயில் நிலையத்திற்கருகாமையில் உள்ள முகாம் என்பன இயங்குகின்றன.

ரூபவாகினி வெண்துணி விரித்த மேசைகளையும் சுத்தமான மண்டபங்களையும் காட்டியது. ஆனால்அங்கு மக்கள் ஆட்டுத் தொழுவத்தில் வாழ்வது போல்தான் வாழ்கிறார்கள். அந்த முகாமில் பொலிசாரின் கையிலேயே அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

12 மலசலகூடங்களுக்கு பொதுவான ஒரு நீண்ட குழி. அந்தக் குழிக்கு மூட பலகைகள். மறைப்பாக புதிய தகரங்கள். ஆனால் அது சுகாதரத்திற்கு பெரும் அச்சுறுத்தல். நிரம்பி வழியும் தறுவாயில் உள்ளது.

ஒரு மாணவனுக்குத் தேவையான இடம் 10ச.அடி. ஆனால் 25×100 சதுர அடியுள்ள கட்டிடத் தொகுதி ஒவ்வொன்றிலும் 300க்கு மேற்பட்டவர்கள் வைக்கப்பட்டுள்ளார்கள். இந்த முகாமினுள்ளே பருவமடைந்த பெண்ணுக்குக் கூட பிரத்தியேகமான இடமில்லை.

## "ஏனய்யா, நாங்களிங்கு தமிழராய்ப் பிறந்தோம்?"

"எனது புருசன் வவுனியாவில் வேலை செய்கிறார். பிள்ளை தாண்டிக்குளத்திற்கும் ஓமந்தைக்குமிடையே அலைந்து கொண்டிருக்கிறது. நான் இந்த முகாமிற்குள் இருக்கிறேன். வெளியே போகமுடியாது ஐயா" என்று ஒரு தாய் அங்கலாய்த்தார்.

"நாங்க மல்லாவியில மரத்துக்கு கீழ் இருந்தோம்.... நாங்க ஏன் தமிழராய்ப் பிறந்தோம்?" என்று இன்னுமொரு மூதாட்டி அங்கலாய்த்தார்.

"ஐயா என் பிள்ளையை தாண்டிக்குளத்தில் தடுத்து வைத்திருக்கிறார்கள். என்ர பிள்ளை என்ன பாடோ தெரியாது...." என சித்தசுவாதீனமான வயதான பெண்ணொருத்தி.

"முதலாந் திகதிக்குள் சவுதிக்குப் போக வேண்டும். இல்லாவிட்டால் வேலை காலியாகி விடும்" என சவுதியில் வேலை செய்து விடுமுறையில் வந்த தொழிலாளர் ஒருவரின் அங்கலாய்ப்பு.

சக்கரப்பாணி காதினுள் புகுந்து, அதனை வெளியே எடுக்கும் முயற்சியில் இரத்தம் வடிந்து ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பட்ட பெண். சாப்பாட்டினுள் சரமாரியாக சக்கரப்பாணி.

ஒருநாளைக்கு இருதடவை தான் பௌசர் மூலம் தண்ணீர் வழங்கப்படுகிறது. ஆயிரத்திற்கு மேற்பட்ட மக்களுக்கு அது எம்மாத்திரம்?

## மக்கள் இந்நிலையில் ஆயினும் யுத்தமே முன்னிலையில்

பாடசாலைக் கட்டிடங்கள் நிரம்பி வழிந்து தற்போது முகாமின் பின்புறத்திலுள்ள விளையாட்டுத் திடலில் கூடாரங்கள். மழைபெய்த போது அது தண்ணீரில் ஊறியது.

வரிசையில் நின்று அரை றாத்தல் பாண் வாங்க ஒரு மணித்தியாலம் செல்கிறது. 16ந் திகதியிலிருந்து இந்த முகாமிற்குக் கொண்டு வரப்பட்டவர்கள் யாரும் முகாமைவிட்டு வெளியே செல்ல அனுமதிக்கப்படவில்லை. தற்போதுதான் பல்வேறு கெடுபிடிகளுடன் 3 மணித்தியாலம் வெளிச் சென்றுவர அனுமதிக்கப்படுகிறார்கள்.

29 பேர் வரை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு சிகிச்சை செய்யப்பட வேண்டியவர்கள். உணவு, நீர், சுகாதாரம் போன்ற பிரச்சினைகளால் அபாயகரமான நிலைமைகள் உருவாகலாம்.

இந்த ஒரு முகாமே இந்த லட்சணத்தில் பராமரிக்கப்படும்போது, அரசு 26 பாடசாலைகள் தயாராக இருப்பதாக, சகல வசதிகளும் செய்து கொடுப்பதாக பிரச்சாரம் செய்கிறது.


பாதுகாப்பமைச்சு வெளியிட்ட ஒரு அறிக்கை, வவுனியாவில் அகதிமுகாமில் வைக்கப்பட்டிருப்போருக்கு சகல விதமான வசதிகளும் செய்துகொடுக்கப்பட்டிருப்பதாகவும், அவர்கள் எங்கு செல்ல விரும்புகிறார்களோ அங்கு அனுப்பி வைக்கப்படுவதாகவும் கூறுகிறது.

தொடர்ச்சி 9

## நாளாந்த வாழ்க்கையை நரகமாக்கியபடி நாம் எங்கே போய்க் கொண்டிருக்கிறோம்?



# போர் எனும் பொறிக்குள் அகப்பட்டுவிட்ட அரசியல்



“சில இராணுவத் தாக்குதல்களை நடாத்துவதும், அதில் ஆயிரக்கணக்கான இராணுவத்தினரைக் கொன்று குவிப்பதும், புலிகளின் வீரத்துக்கு விளம்பரமாக இருக்கலாம். ஆனால் அதுவே தீர்வினை ஏற்படுத்திவிடாது.”

“2 லட்சம் பேர் அகதிகளாகி மரங்களுக்கு கீழும் காடுகளிலும் வாழ்க்கை நடாத்தும் துயரமான நிலைமை. குடிக்கத் தண்ணி இல்லை, ஒரு நேரச் சாப்பாட்டுக்கு வழியில்லை. இந்த நிலையிலிருந்து மீள யுத்தத்தில் ஈடுபட்டோர் ஒருபோதும் தாமாகவே முன்வர மாட்டார்கள்.”

“இரு பகுதியினருமே கொலைக் களத்துக்கு சிறுவர்களையும், இளைஞர்களையும் தயார்ப் படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளார்களே தவிர, சரியான ஓர் தீர்வொன்றினைக் காண்பதில் இவர்களுக்கு அக்கறை இல்லை என்பதே உண்மை.”

## அன்பிற்கினிய தமிழ் மக்களே!

ஆகஸ்ட் 10ம் திகதியன்று ஈ.பி.ஆர்.எல்.எப். கொழும்பில் ஓர் கலந்துரையாடலை நடாத்தியது. தமிழ் மக்களின் இன்றைய நிலை தொடர்பாகவும், இனப்பிரச்சினை தீர்விற்கு வேறு ஏதாவது மாற்றுவழிகள் உண்டா என்பதை ஆராய்வதற்காகவுமே இக் கலந்துரையாடல் கூட்டப்பட்டது.

தமிழ் சமூகத்தின் பல தரப்பினரையும் பிரதிநிதித்துவப்படுத்தக்கூடிய 50 பேர் இக் கலந்துரையாடலுக்கு அழைக்கப்பட்டிருந்தனர். கொழும்பு, மட்டக்களப்பு, பல்கலைக் கழக விரிவுரையாளர்கள், ஓய்வுபெற்ற சிவில் உத்தியோகத்தர்கள், ஆசிரியர்கள், பத்திரிகையாளர்கள், சமாதானப் பணியில் ஈடுபடுவோர், வர்த்தகர்கள், முற்போக்கு சிந்தனை கொண்ட சிலர் என பல தரப்பினரையும் உள்ளடக்கியதாக இக்கலந்துரையாடல் இருந்தது.

இன்றைய அரசின் யுத்த நிலைமைகள் தொடர்பாக சகல தரப்பினருமே மிகவும் மனம் நொந்த நிலையிலேயே இருந்தனர். அரசியல் தீர்வொன்றின் அவசியமும், அதனை உடன் நடைமுறைப்படுத்த வேண்டிய தேவையையும் சகல தரப்பினரும் வலியுறுத்தினர்.

அரசாங்கம் அரசியல் தீர்வை கிடப்பில் போட்டுவிட்டு, யுத்த முயற்சிகளிலேயே முனைப்பாக உள்ளதைச் சுட்டிக்காட்டிய சிலர், அரசாங்கம், 'யு.என்.பி. ஒத்துவரவில்லை, புலிகளின் யுத்தம் போன்றவற்றை காரணம் காட்டுவதை விடுத்து, அரசியல் தீர்வொன்றை உடனடியாக முன்வைக்க வேண்டும்' எனவும் வலியுறுத்தினர்.

அரசாங்கம் இவற்றை கவனத்திலெடுக்க வேண்டுமாயின், அரசாங்கத்துக்கு தமிழ் அரசியல் கட்சிகள் சில அழுத்தங்களை உருவாக்க வேண்டும் எனவும் அவர்கள் வேண்டுகோள் விடுத்தனர்.

அவற்றில் முக்கியமாக, பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் தமிழ் அரசியல் கட்சிகள் இதில் கூடுதலான கவனம் செலுத்த வேண்டும் எனவும் அவர்கள் கேட்டுக்கொண்டனர். பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணி, புளொட், ஈ.பி.டி.பி. போன்ற கட்சிகள் அரசுக்கு ஓர் கால அவகாசத்தை கொடுத்து, அக் குறிப்பிட்ட காலத்துக்குள் அரசாங்கம் தீர்வு யோசனைகளை அமுல்படுத்த வேண்டும் எனவும், தவறும் பட்சத்தில், அரசுக்கு கொடுக்கும் ஆதரவை நிறுத்தி, தமது எதிர்ப்பை அரசுக்கு தெரிவிக்க வேண்டும் எனவும் கருத்துத் தெரிவித்தனர்.

இன்னொரு சாரார் கருத்துத் தெரிவிக்கையில், இப்பொழுது உள்ள அரசியல் சாசனத்துக்கு திருத்தம் கொண்டுவருவதென்று கூறுவதெல்லாம் சாத்தியமற்ற விடயம். ஏனெனில் அரசியல் சாசனத்துக்கு திருத்தம் கொண்டு வருவதெனில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை தேவை. அந்த மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்றுக் கொள்வதெனில் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவு அவசியம். ஆனால் ஐக்கிய தேசியக் கட்சி 'திருத்தங்களுக்கான ஆதரவைத் தர மாட்டேன்' என திட்டவட்டமாகக் கூறிவிட்டது. அரசும், எதிர்க்கட்சியும் அரவணைத்துப் போதல் என்பதற்குப் பதிலாக 'மோதல் அரசியலையே' (Confrontational) நடாத்தி வருகின்றனர்.

இந்நிலையில் ஐக்கிய தேசியக்கட்சி திருத்தங்களுக்கு ஆதரவு கொடுக்கும் என்பதை எதிர்பார்ப்பதற்கில்லை. எனவே அரசியல் சாசனத்துக்கு திருத்தம் கொண்டு வருவதென்பதை விடுத்து, புதிய அரசியல் சாசனம் ஒன்றை வரைவதே சரியானதாக இருக்கும் எனவும் கருத்துக் கூறினர்.

ஆளும் கட்சி, எதிர்கட்சி ஆகியவற்றில் உள்ள பாராளுமன்ற உறுப்பினர்களில், அவர்களின் விகிதாசாரத்துக்கேற்ப, அவர்களை உள்ளடக்கிய ஓர் அரசியல் நிர்ணய சபை ஒன்றை உருவாக்கி அதன்மூலம் இவ்வரசியல் சாசனத்தை வரைய முடியுமெனவும், இவற்றுக்கு முஸ்லீம், தமிழ் கட்சிகளின் ஆதரவையும் பெற்றுக்கொள்ள முடியுமெனவும், இவ்வாறு உருவாகும் புதிய அரசியல் சாசனத்தை பாராளுமன்றம் அங்கீகரிப்பதன் மூலம் இதனை நிறைவேற்ற முடியுமெனவும் கருத்து கூறப்பட்டது.

மூன்றாவதாக, 3ம் தரப்பின் மத்தியஸ்தம் ஒன்றன் அவசியமும் வலியுறுத்தப்பட்டது. புலிகள் சர்வதேச மத்தியஸ்தத்தை கோருகின்றார்கள். அரசு, 'உள்நாட்டு பிரச்சினை, இதனை நாம் தீர்ப்போம்' என்கின்றார்கள். ஆனால் அரசியல் தீர்வுக்குப் பதில் யுத்தமே முனைப்படைந்து செல்கின்றது. இந்நிலையில் சரியான ஓர் அரசியல் தீர்வொன்றைக்காண 3ம் தரப்பொன்றின் மத்தியஸ்தமும் வலியுறுத்தப்பட்டது.

ஏற்கனவே அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் நடைபெற்ற பல பேச்சுவார்த்தைகள் முறிவடைந்துள்ளன. பேச்சுவார்த்தைகள் முறிவடைந்ததும் பரஸ்பரம் ஒருவருக்கொருவர் குற்றம் சாட்டுவதும், யுத்தம் மீளத் தொடங்குவதுமே இங்கு காலாகாலமாக நடைபெற்று வருகின்றது. எனவே ஓர் சர்வதேச மத்தியஸ்தத்தினூடு நடைபெறும் பேச்சுவார்த்தையை - அரசு, புலிகள் இருதரப்பினரும் குழப்புவதில் பல சங்கடங்கள் ஏற்படுமெனவும், இருதரப்பினரும் கொடுத்த வாக்குறுதிகளில் இருந்து பின்வாங்குவது கடினமாக இருக்கும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டது.

இதனை விட வேறு பல ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டாலும், அவை நீண்டகாலத் திட்டத்தின் அடிப்படையிலான ஆலோசனைகள் என்பதால், அவை தொடர்பான விபரத்தை இங்கு தவிர்த்துக் கொள்கின்றோம்.

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியைப் பொறுத்தவரை, 3வது சக்தி ஒன்றின் தலையீட்டை ஆரம்பத்தில் இருந்தே வலியுறுத்தி வருபவர்கள் நாம். ஏனெனில், இலங்கையின் வரலாற்றில் அரசுக்கும், தமிழர் தரப்பிற்கும் இடையில் ஏற்பட்ட ஒப்பந்தங்கள் யாவும் கிழித்தெறியப்பட்டதாகவோ, மீறப்பட்டதாகவோதான் வரலாறு உண்டு.

இந்திய இலங்கை ஒப்பந்தத்தினூடு உருவாக்கப்பட்ட தீர்வு கூட சரியான முறையில் அமுல்படுத்தப்படவில்லை என்பதுதான் உண்மை. இந்தியா இவ்வொப்பந்தம் அமுல்படுத்தப்படுமென உத்தரவாதம் அளித்தும் கூட நடைமுறையில் அவை சரியான முறையில் செயற்படுத்தப்படவில்லை என்பதே உண்மை. இதற்கு முக்கியமாக இரண்டு காரணங்கள். ஒன்று, பிரேமதாசா அரசு ஒப்பந்தத்திற்கு எதிராக செயற்பட்டமை. இரண்டாவது, புலிகள் ஒப்பந்தத்தை சீர்குலைக்கும் முயற்சிகளில் ஈடுபட்டமை.

இதில் புலிகளும் பிரேமதாசா அரசும் கூட்டுச்சேர்ந்து செயற்பட்டன. பிரேமதாசா அரசு ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்தவில்லையெனில், இந்திய அரசினூடு நாம் பிரேமதாசா அரசின் மீது பல அழுத்தங்களை உருவாக்கியிருக்க முடியும். ஆனால் இரு தரப்பினருமே இதனை எதிர்த்ததும், தமிழ் மக்களும் புலிகளின் பாதை சரியென அவர்களுடன் இணைந்து போனதுமே, இந்திய இலங்கை உடன்படிக்கை சரியாக நிறைவேற்ற முடியாமைக்கான காரணமாகும்.

ஆனாலும் கூட ஈ.பி.ஆர்.எல்.எப். இன் முயற்சியால் இவ்வொப்பந்தம் சிறிது சிறிதாக நிறைவேற்ற முயற்சிகள் எடுக்கப்பட்டன. ஆனால் அவையும் கூட புலிகள்-பிரேமதாசா அரசின் கூட்டுச்சதியில் 'முறியடிக்கப்பட்டன.

இன்று புலிகளும், தமிழ் மக்களும் கூட இந்தியாவின் உதவியை எதிர்நோக்கி நிற்கின்றார்கள். அச்சமயத்தில் இந்தியாவை எதிர்த்த கொழும்புத் தமிழ் பத்திரிகைகள் கூட இந்தியா தலையிட வேண்டும் என விரும்புகின்றன. முன்னர் எமக்கு கிடைத்த உதவிகளை எட்டி உதைத்தோம். இன்று அவர்கள் உதவி செய்ய மாட்டார்களா என ஏங்கித் தவிக்கின்றோம்.

இலங்கையை பொறுத்தவரை, இனப்பிரச்சினை தீர்விற்கான ஓர் நீதியான நியாயமான தீர்வினை நாம் எதிர்பார்க்க முடியாது. ஏனெனில், பெரும்பான்மை சமூகத்திடம் இருந்து அதற்குப் பாரிய எதிர்ப்புகள் தோற்றுவிக்கப்படும்.

பெரும்பான்மை சமூகத்துள் ஆளுமை செலுத்தக்கூடிய புத்த பிக்குகளும், ஐக்கிய தேசியக்கட்சியும் இனவாதக் குழுக்களும் சரியான தீர்வொன்று ஏற்பட இடையூறாகவே இருப்பார்கள். இன்றைய ஜனாதிபதி எவ்வளவுதூரம் தான் முற்போக்கானவராகவும், அரசியல் தீர்வில் அக்கறையுள்ளவராகவும் இருந்த போதும் கூட, அவரும் மேற்கண்ட இனவாதிகளின் அழுத்தங்களுக்கு உட்பட்டே போக வேண்டும்.

பாராளுமன்றத் தெரிவுக்குழுவிற்கு அவர்கள் வைத்த ஆலோசனைகள், அவர்களால் மாற்றப்படுவதிலிருந்தே இவற்றைப் புரிந்து கொள்ளலாம். எனவே உள்ளூரில் ஓர் நீதியான நியாயமான தீர்வொன்று ஏற்படுமென்றோ, அதனை யாராவது அமுல்படுத்துவார்கள் என்றோ எதிர்பார்க்க முடியாது.

எனவே நீதியான தீர்வொன்று ஏற்படுத்தப்பட வேண்டும் என்பதுடன், அதனை அமுல்படுத்த ஏதாவதொரு சர்வதேச அமைப்பு உத்தரவாதம் அளிக்கவும் வேண்டும். எனவேதான் ஓர் சர்வதேச சமூகத்தின் தலையீடு, மத்தியஸ்துவம் இதற்குத் தேவையென வலியுறுத்துகின்றோம்.

எமது பிராந்தியத்தில் இப்பிரச்சினையை தீர்க்கக் கூடிய, அதனை நடைமுறைப்படுத்தக்கூடிய வல்லமை உள்ள நாடு இந்தியா மாத்திரமே. ஆனால் புலிகளின் கொலை வெறிக்கு இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி பலியாகிப் போனதன் பின்னர், இந்தியா இலங்கையில் தலையிடாக் கொள்கையையே கொண்டுள்ளது.

இந்தியா தனது கொள்கையில் மாற்றங்களை உருவாக்கி, இலங்கையில் இனப்பிரச்சினை தீர ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். இதற்கு இந்தியாவைத் தலையிடவைக்கக் கூடிய வகையில் தமிழ் மக்கள் இந்தியாவைத் தூண்ட வேண்டும். வெகுஜனக் கருத்துக்களை - வெகுஜனப் போராட்டங்களை உருவாக்கி, இப் பிரச்சினையில் இந்தியா தலையிட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தலாம்.

இந்தியா தலையிட மறுக்கும் பட்சத்தில், இந்தியாவினூடு அல்லது இந்தியாவின் ஒப்புதலுடன் ஓர் சர்வதேச ஸ்தாபனத்தை இப்பிரச்சினைக்கு மத்தியஸ்தம் செய்ய அணுகலாம். இதுதான் இன்று நாம் செய்யக்கூடிய முக்கிய கடமையாகும்.



www.padippakam.com



## அன்பார்ந்த தமிழ் மக்களே!

நாம் மிருகங்களிலும் விட கேவலமாக நடாத்தப்படுகின்றோம், சூடு, கொலை, அகதி வாழ்வு, பஞ்சம், பட்டினி என எமது துயர் சொல்லிமாளாது. ஆனால் யுத்தம் முழுமையாக நிற்கும்வரை, இதில் எவ்வித மாற்றமும் ஏற்படப் போவதில்லை. எனவே யுத்தத்தை நிறுத்தவும் பிரச்சினையை தீர்க்கவும் நாம்தான் முயற்சி செய்ய வேண்டும்.

நாம் மௌனமாக இருக்கும்வரை, அரசும் அதனை தனக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளும். அதேபோல் புலிகளும் தமக்கு சாதகமாக எம்மை பயன்படுத்திக் கொள்வர். எனவே எமக்கு என்ன தேவை என்பதை நாம்தான் வலியுறுத்த வேண்டும்.

சில இராணுவத் தாக்குதல்களை நடாத்துவதும், அதில் ஆயிரக்கணக்கான இராணுவத்தினரைக் கொன்று குவிப்பதும், புலிகளின் வீரத்துக்கு விளம்பரமாக இருக்கலாம். ஆனால் அதுவே தீர்வினை ஏற்படுத்திவிடாது. யாழை பறிகொடுத்து, 5 இலட்சம் மக்கள் ஒரே இரவில் அகதிகளாகி, இன்று வன்னியிலும் அதேநிலைமை.

2 லட்சம் பேர் அகதிகளாகி மரங்களுக்கு கீழும் காடுகளிலும் வாழ்க்கை நடாத்தும் துயரமான நிலைமை. குடிக்கத் தண்ணி இல்லை, ஒரு நேரச் சாப்பாட்டுக்கு வழியில்லை. இந்த நிலையிலிருந்து மீள யுத்தத்தில் ஈடுபட்டோர் ஒருபோதும் தாமாகவே முன்வர மாட்டார்கள். இவர்கள் இரு தரப்பினருமே எமக்காகப் போராடுவதாகக் கூறியே எம்மைப் பலிக்கடாக்கள் ஆக்குகின்றார்கள்.

**தமக்கு இழப்புகள் வரும் பொழுது வெளிநாடுகளுக்கு ஓடுவது, கூக்குரலிடுவது, இனப்படுகொலையென புலிகளும், அப்பாவிகளை புலிகள் கொல்கின்றார்கள் என அரசும் சங்கீதம் பாடுவதைத் தவிர வேறொன்றுமில்லை.**

ஓர் முகாமைத் தாக்குவது, அதனை வீடியோப் படமாக்குவது, அதனை கிராமங்களில் உள்ள சிறார்களுக்கு போட்டுக் காட்டுவது, இதனூடு அவர்களையும் இணைத்து, அவர்களையும் கொலைக்களத்திற்கு அனுப்புவது. இது ஓர் தொடர்ச்சியான நடைமுறையாகி விட்டது.

இதனைப் போன்றே அரசும் சில தமிழ்ப் பகுதிகளை கைப்பற்றுவது, அதனை பாரிய அளவில் விளம்பரப்படுத்துவது, இதனூடு இளைஞர்களை இராணுவத்திற்கு அணிதிரட்டுவது....

இவ்வாறு இரு பகுதியினருமே கொலைக் களத்துக்கு சிறுவர்களையும், இளைஞர்களையும் தயார்ப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளார்களே தவிர, சரியான ஓர் தீர்வொன்றினைக் காண்பதில் இவர்களுக்கு அக்கறை இல்லை என்பதே உண்மை.

தமக்கு இழப்புகள் வரும்பொழுது வெளி நாடுகளுக்கு ஓடுவது, கூக்குரலிடுவது, இனப் படுகொலையென புலிகளும், அப்பாவிகளை புலிகள் கொல்கின்றார்கள் என அரசும் சங்கீதம் பாடுவதைத் தவிர வேறொன்றுமில்லை.

எனவே சரியான 3வது தரப்பொன்றின் மத்தியஸ்தினூடே இவர்களை சரியான பாதைக்கு கொண்டுவர முடியும். இதற்கு நாம்தான் முயற்சி செய்ய வேண்டும்.

பாராளுமன்றத்தில் இருப்பவர்களும், யுத்தம் புரிபவர்களும் ஒருவிதமான பொறிக்குள் அகப்பட்டவர்களாகவே இருக்கின்றார்கள். பாராளுமன்றத்தில் இருப்பவர்களைப் பொறுத்தவரை, தாம் இராணுவத்துடன் இருந்து புலிகளுக்கு எதிராகப் போராடிக் கொண்டு, அரசை எதிர்க்க முடியாது. அரசு பிழை விட்டாலும் கூட அவற்றைச் சுட்டிக் காட்ட, அவற்றை எதிர்க்க கூடிய சூழ்நிலையில் அவர்கள் இல்லை. ஓர் வரையறைக்குள்ளேயே அவர்களால் செயற்படமுடியும்.

வரையறையை மீறினால் இராணுவத்துடன் நிற்கும் அவர்களது உறுப்பினர்களுக்கு என்ன நடக்கும்? அவர்களது ஆயுதங்கள் பறிக்கப்படுமா? அப்படிப் பறித்தால் புலிகள் சும்மா விடுவார்களா? உயிருக்கு உத்தரவாதம் உண்டா? அரசு இவர்களுக்கு கொடுக்கும் கொடுப்பனவுகளை நிறுத்திவிட்டால் என்ன செய்வது? போன்ற பல பிரச்சினைகளை இவர்கள் எதிர்நோக்கி இருப்பதால், இவர்களது நடவடிக்கைகள் ஓர் வரையறைக்குள்ளேயே இருக்கமுடியும்.

இராணுவத்துடன் இல்லாத தமிழர் விடுதலைக் கூட்டணியும் கூட, அரசுடன் பேச்சுவார்த்தை நடாத்தியே பிரச்சினையை தீர்த்து விடலாம். இதற்கு பொதுமக்களின் அழுத்தம் எதுவும் தேவையில்லை என்றே கருதுகின்றார்கள்.

புலிகளைப் பொறுத்தவரை, யுத்தத்தை நிறுத்துவதென்பது கௌரவப் பிரச்சினை. தற்கொலைப் போராளிகள் யாவரும் தமிழீழம் கிடைக்கும் என்றே தம்மை மாய்த்துக் கொள்கின்றார்கள். "நீ போ, உன் பின்னால் நான் வருவேன்" என்றே அவர்களின் இறுதியாத்திரையின் போது தலைவர் உறுதி கூறி வழி அனுப்பிவைக்கின்றார்.

எனவே தமிழீழத்தை விட்டு புலிகளின் தலைவரால் இறங்கி வர முடியாத இக்கட்டான சூழ்நிலையிலேயே தம்பி பிரபாகரன் உள்ளார். யுத்தத்தை அவர் விட்டாலும் அவரை யுத்தம் விடாது என்ற சூழ்நிலையிலேயே அவர்கள் உள்ளார்கள். இவற்றை எல்லாம் கவனத்திலெடுத்தால் இப்பிரச்சினையை தீர்ப்பதற்கு 3வது தரப்பொன்றின் அவசியம் உங்களுக்குப் புரியும்.

எனவே யுத்தத்தை நிறுத்தி நீதியான தீர்வொன்றினைக் காண நாம் அனைவரும் ஓரணி திரண்டு செயல்புரிவோம். ●

## உளறு வாயன்



"நாம் அறிய ஆசைப்படும் அளவுக்கு அறிய முடியாமல் போகும் போது நமக்குப் பிதற்றுவதைத் தவிர வேறுவழியில்லை"

– நிரபராதிகளின் காலம்

எண்பத்தேழில பக்கத்து நாட்டுக்காறர் காட்டின பரபரப்பு மாதிரி ஒரு பரபரப்பை இப்ப கிளின்டன் நாட்டுக்காரர் காட்டுற மாதிரி தெரியுது. அப்ப போல காதும் காதும் வச்ச மாதிரியாய் இல்லாமல் நடக்கிறவிஷயங்கள் எல்லாருக்கும் தெரிய வேணும் எண்டமாதிரி ஒரு சின்னப் பரபரப்புக் காட்டப்படுது. இது ஆருக்கேனும் 'சூ'காட்டுறதுக்காய்ச் செய்யிறவேலையோ எண்டும் ஐமிச்சமாய்த்தான் கிடக்கு. முதல்ல அஞ்சு தமிழ்க் கட்சியளைக் கூப்பிட்டு விருந்து. அடுத்த நாள் பழைய தமிழ்க் குழுவைக் கூப்பிட்டுக் குசலம். பிறகு தமிழ் எம்பிக்களையும் பத்திரிகைக் காரர்களையும் அழைச்சுப் பார்ட்டி. அதுக்கடுத்தடுத்த நாள் தொண்டர் ஸ்தாபனங்களோடையும் தனி ஆக்களோடையும் பேச்சு. இப்பிடி ஒரே திடீர் ஆவேசமாய்த்தான் கிடக்கு. அரசும் புலியும் என்ன செய்யப் போகினம் எண்டும், ரெண்டு பேரும் இப்பிடியே எவ்வளவு காலத்துக்குத் தொடர்ந்து சண்டை நடத்திறதுக்குப் பலம் வைச்சிருக்கினம் எண்டும், புலிச்சண்டை பற்றி, ஆசாங்கம் பற்றி, சனம் என்ன நினைக்கினம் எண்டதையெல்லாம் ஆர்வத்தோடை விசாரிக்கினம். கட்சியள் தொண்டர் ஸ்தாபனங்கள் குறிப்பிட்ட சில தனி நபர்கள் எல்லாரிட்டையுமிருந்து நாட்டு நடப்பு பற்றின அபிப்பிராயங்களைத் திரட்டுகினமாம். என்னத்துக்கு? எண்டதைத் தான், எங்கடை வேம்படி மணியத்தார் தண்ணியடிச்சால் மேலுக்கு வெத்திலையைப் போட்டுட்டுச் சிரிக்கிற மாதிரி மழுப்பலாய்ச் சிரிச்சு மர்மமாய்க் காட்டுகினம். அம்பாந்தோட்டையில 'கிறீன்பரட்ஸ்' வந்து ஆமிக்குப் பயிற்சி குடுத்திச்சினம். இப்ப அநுராதபுரத்தில இறங்கி நிக்கினம். வெளியுறவுச் செயலர் வந்து போனார். புலிப்பயங்கரவாதத்தை அடக்கவேணுமெண்டு கரிசனையாய் அறிக்கை விட்டிச்சினம். இப்ப வழமையாய்த் தகவல் சேகரிக்கிற முறையளுக்கு மேலாலை எல்லாருக்கும் தெரியிற விதமாய் ஆக்களைக் கூப்பிட்டுக் கதைக்கினம். எந்தக் குடுமியும் சும்மா ஆடுறேல்ல எண்டதை நம்பினால், நாம குடுமியைப் பிய்க்கிற மாதிரித்தான் போகுது விஷயங்கள்.

இந்தத் தீர்வுத் திட்டம் சமாதான முன்னெடுப்புக்கள் எல்லாம் எங்கையோ திருகுப்பட்டுப் போய்த்தான் நிக்குது. யுத்த சன்னத்தமாய் நிக்கிறவையை வழிக்குக் கொண்டு வாறதெண்டால் ரெண்டு பக்கமும் மக்களைத் திரட்டித்தான் எதையாவது புரிய வைக்கவேணும். அதுக்கான தொடக்க முயற்சியாய் தமிழ்ப்புத்தி ஜீவிகள் சிங்களப் புத்தி ஜீவிகள் வெகுசன தொடர்புக்காறர் எண்டு சில பல கலந்துரையாடல்களும் ஆலோசனையளும் நடக்கிறமாதிரித்தான் தெரியுது. ஆனால் எதையும் செயல் திட்டத்தில கொண்டு வாறதுக்கு தமிழ்க் கட்சியள், தொண்டர் ஸ்தாபனங்கள், மனித உரிமை சமாதான அமைப்புக்களெல்லாம் ஏதோ ஒரு தளத்தில ஒண்டுபட்டு இறங்க வேணும். ஆனால் தமிழ்க் கட்சியளோ தண்ணிக் கொண்டு தவிட்டுக்கொண்டு இழுத்த கதையாய் வேற வேற ஆசையளுக்கு இழுபட்டுக் கொண்டிருந்தால் எல்லாருக்கும் பொதுவான இனப்பிரச்சினைக்குத் தீர்வெங்கை வாறது. அவரவர் கட்சி நலனையும் தனிப்பட்ட நலனையும் மக்களின் நலனுக்குக் கீழ்படுத்தி யோசிக்கிற தலைவர்களாலதான் இப்ப இஞ்சை 'நாங்கள் மக்களுக்காகத்தான் இருக்கிறம்' எண்டு நெஞ்சு நிமிர்த்திச் சொல்லேலும். மக்கள் அன்னக்காவடியளாய் அலைஞ்சு கொண்டும் செத்துக் கொண்டுமிருக்கிற இந்த நேரத்தில, சில்லறைப் பிடிவாதங்களும் காய்நகர்த்தி அரசியல் செய்யிறம் எண்டு கெட்டித்தனம் காண்பிக்கிறதும் சகிச்சுக் கொள்ளேலாத குரூரத்தனங்கள் தான். இந்த நேரம் தமிழ்க் கட்சியள் செய்ய வேண்டிய வெலையளை எல்லாம் சின்னச் சின்னப் பிரச்சினையளைக் காட்டித் தள்ளிப் போட்டுக் கொண்டிருக்கிறது ஏனெண்டு ஒரே சமுசயமாய்த்தாய் கிடக்கு. யுத்தத்தில் தீவிரமாயிருக்கிறவை, அதை நிப்பாட்டிப் போட்டு தாங்களாகவே தீர்வுக்கு வரமாட்டினை. சனத்தின்ர பக்கமிருந்துதான் நெருக்குவாரத்தைக் குடுக்கவேணும். தமிழ் கட்சியள் ஒத்து நிண்டு எதையாவது செய்வினம் எண்டு பாத்தால், ஏறச்சொன்னால் எருதுக்குக் கோவம் இறங்கச் சொன்னால் முடவனுக்குக் கோவம் எண்டமாதிரி ஒத்தரட்டை பிடிச்சுக்கொண்டுதான் நிக்கினம்போலை கிடக்கு. தமிழ்க்கட்சியள் ஒத்தபடி ஒண்டுஞ் செய்யவிடாமல் பண்ணுறதில கனபேர் புகுந்து விளையாடுவினம் எண்டதும் உண்மைதான்.

கனக்கக் கதைக்க நேரமில்லை. அடுத்த முறை பாப்பம். வரட்டே. ●

# மாவீரர்களான முன்னாள் துரோகிகளும் துரோகிகளான முன்னாள் மாவீரர்களும்

**தமிழீழ விடுதலைப் புலிகளின் கொடிய வன்னிக்காட்டு வதைமுகாமில் ஆறு வருடங்களுக்கு மேலாக சிறைவைக்கப்பட்டிருக்கும் பெண்கள், மாணவர்கள், அரச ஊழியர்கள் உட்பட சுமார் நாலாயிரத்துக்கு மேற்பட்ட தமிழ் அரசியல் கைதிகளை நினைவுகூர்ந்து இப்பிரசுரத்தை சமர்ப்பணம் செய்கிறோம்" என்ற சமர்ப்பண குறிப்புடன் புலம்பெயர்ந்த சமாதான விரும்பிகள் வெளியிட்டிருக்கும் துண்டுப்பிரசுரத்திலிருந்து சில பகுதிகள்**

எதிரி யார்? நண்பன் யார்? எனப் புரியாது, தமிழ் மக்களின் வாழ்க்கையோடு விளையாடும் புலிகளையும் புலி வால்களையும் இனம் காண்போம். உலகிலேயே நட்பு சக்திகள் இல்லாத அபூர்வ விடுதலை இயக்கம் விடுதலைப்புலிகள்தான் என்ற மறுக்கமுடியாத உண்மையை உணர்ந்து மாற்றத்தை ஏற்படுத்துமாறு வேண்டுவோம்.

**புலிகள் இயக்கம் பயங்கரவாத அமைப்பே!**

– அமெரிக்க அரசு செயலகம் அறிவிப்பு.

**புலிகள் இயக்கத்திற்கு ஆதரவு இல்லை!**

– இந்திய மத்திய மாநில கட்சிகள் அறிவிப்பு.

**தமிழீழ விடுதலைப் புலிகளுக்காதரவாக செயற்படும் நிரந்தர குடியுரிமை பெற்றவர்கள் குடியுரிமை பறிக்கப்படுவர்!**

– மலேசியா அறிவிப்பு.

**புலிகளின் சர்வதேச பயங்கரவாதத்தை ஒடுக்க**

ஸ்கொட்லாண்ட்யார்ட் உதவும்.

**சுவிஸ் புலிப்பொறுப்பாளர் முரளி உட்பட பலர் கைது! "பாதிக்கப்பட்ட மக்களின் புகார்களின் அடிப்படையில் கைது செய்தோம்"**

– சுவிஸ் அதிகாரி.

**தமிழீழ விடுதலைப்புலிகளின் பயங்கரவாத செயல்களைக் கண்டிக்கிறோம்!**

– ஐரோப்பிய யூனியன்.

**கனடாவில் வன்முறைக் கலாச்சாரத்திற்கு தலைமை தாங்கிய உலகத்தமிழர் இயக்கத் தலைவர்களில் ஒருவரான சுரேஸ் கைது! "தமிழர்களுக்கெதிரான நடவடிக்கையல்ல"**

– க்னேடிய அமைச்சர் அறிவிப்பு.

இனிய தமிழ் மக்களே!

ஒரு விடுதலைப் போராட்டத்தின் வெற்றிக்கு வழிவகுக்கும் பல காரணிகளில் சர்வதேச அபிப்பிராயமும் உலக மக்களின் தார்மீக ஆதரவும் மிக அவசியம் என்பது சிறுபிள்ளைகளுக்குகூட தெரிந்த விடயம். மேலே வாசித்த பத்திரிகைத் தலைப்புச் செய்திகள் நமக்கு எதைக் காட்டுகிறது? புலிகளின் சர்வதேச மட்டத்திலான வன்முறைக் கலாச்சார நடவடிக்கைகளால் தமிழ் மக்கள் மீதான கொஞ்ச நஞ்ச உலக ஆதரவும் கெட்டுவிட்டது என்பதைக் காட்ட் வில்லையா? உலகநாடுகளில் எமது போராட்டத்திற்கு எதிர்ப்புகள் ஏற்பட சந்திரிகா அரசின் பிரச்சாரம் தான் காரணம் என விமர்சிக்கும் நாம் ஒருகணம் 'நாமும் காரணமா?' என சிந்தித்துப் பார்த்தால் என்ன? மற்றவர்களையே விமர்சித்துக் கொண்டிருக்கும் தமிழினமே! எமது தவறுகளையும் சுயவிமரிசனம் செய்து தமிழ் மக்களின் விடிவிற்கு வழிசமைக்க ஏன் முயற்சிக்ககூடாது?...

....இனிய தமிழ் மக்களே! கடந்தகால அனுபவங்களிலிருந்து எதிரிகள் மட்டும்தான் பாடம் படிக்க வேண்டுமா? நாமும்தான் பாடம் படிக்க வேண்டும். அன்று சிறிலங்கா ஒடுக்குமுறையாளர்களுக்கு எதிராக மதில்களில் சுலோகங்கள் எழுதுவது அரச பேருந்து வண்டிகளுக்கு கல்லெறிவதில் ஆரம்பித்த போராட்டம்தான் இன்று பொம்பர்களை சுட்டுவீழ்த்தும் நிலைக்கு வளர்ந்திருக்கின்றது. அன்றைய சிறு பொறிதான் இன்று காட்டுத் தீயை உருவாக்கியிருக்கிறது. அடக்குமுறைக் கெதிராக கிளர்ந்தெழும்பும் மக்கள் சக்தியை யாராலும் தடுக்க முடியாது. இந்த வரலாற்று அனுபவத்தை புரிந்து கொள்ளாது புலிகளும் மக்கள் விரோதிகளாக மாறிவருகின்றார்கள்...

...மேற்குலகநாடுகளில் தவறு செய்த அரசியல் தலைவர்கள், தோல்விகண்ட அரசியல் தலைவர்கள் பகிரங்க மன்னிப்பு கோருகின்றார்கள், பதவி விலகுகின்றார்கள். வாக்குறுதியை நிறைவேற்றவில்லை என்பதற்காக கூட பதவி விலகும் ஜனநாயக சூழ்நிலையை தமிழீழ மக்கள் அறியாது விட்டாலும், புலம்பெயர்ந்த தமிழர்களாகிய நீங்கள் அறிவீர்கள். இந்த முன்மாதிரியைப் பின்பற்றி புலிகளின் கடந்தகால தூரநோக்கற்ற அரசியல் முடிவுகள், மக்கள் விரோத ஜனநாயக விரோத நடவடிக்கைகளுக்கு தேசியத் தலைவர்? பகிரங்க மன்னிப்புக் கோர வேண்டும் என நிர்ப்பந்திப்போம். இதன் மூலமாவது புலிகள் தமக்கு புதிய இரத்தம் பாய்ச்சி தமிழீழ, சர்வதேச மக்கள் மத்தியில் போராட்டம் மீதான நம்பகத் தன்மையை ஏற்படுத்தி விரைவான விமோசனத்திற்கு வழிசமைக்குமாறு வேண்டுவோம். இல்லையேல் சுயகௌரவம் பாராது தமிழீழத்தில் ஜனநாயக சூழ்நிலையை உருவாக்கி புதிய தலைமைகள் உருவாக வழிசமைக்குமாறு புலிகளைக் கோருவோம்.

தமிழீழ மக்கள் மீதான புலிகளின் அடக்குமுறைகளை, ஜனநாயக விரோத செயற்பாடுகளை நிறுத்துமாறு புலம்பெயர்ந்த தமிழர்களாகிய நாம் அழுத்தம் பிரயோகிப்போம். உலகநாடுகளில் புலிகளினதும் புலிவால்களினதும் வன்முறைக் கலாச்சாரத்திற்கு முற்றுப்புள்ளி வைப்போம். அதன் மூலம் தேமதுரத் தமிழோசை உலகமெங்கும் மீண்டும் பரவும் வகை செய்வோம்.

– புலம்பெயர்ந்த சமாதான விரும்பிகள்.

படிப்பகம்

www.padippakam.com



# இன்றைய அவசரத் தேவை தீர்வும், வடகிழக்கில் ஜனநாயக ரீதியில் தேர்ந்தெடுக்கப்பட்ட அரச அதிகாரமுமே!

அன்புடன் ஆசிரியர் அவர்கட்கு,

ஆவணி இதழில் வெளியான மன்னார் தமிழ்ச் செல்வனின் கடிதம் கண்டேன். புலிகளையும் அரசையும் கண்ணோட்டம் துணிந்து விமர்சிப்பதாக எழுதியிருந்த அவர், சில கேள்விகளையும் எழுப்பி உள்ளார்.

*"உங்கள் பத்திரிகையில் புலிகளை அராஜகவாதி என்கிறீர்கள், கொலைகாரர் என்கிறீர்கள், பாசிசவாதிகள் என்றும் கூறுகின்றீர்கள், நமது போராட்டத்தை சின்னாபின்னப்படுத்தியவர்கள் புலிகளே என்றும் கூறுகிறீர்கள்.*

*இந்த அரசு தீர்வை வைக்காமல், தேர்தல் வந்து அதில் ஐக்கிய தேசியக்கட்சியோ அன்றி இவர்களோ மீண்டும் வந்து ஒற்றையாட்சிதான் என்கிறார்கள். தமிழ் மக்களுக்கான தீர்வை முன்வைக்கவில்லை என்றால் நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்? உங்கள் முடிவுதான் என்ன? திரும்பவும் இந்தியாவுக்கு ஓடப் போகிறீர்களா?*

*ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சியில் இருந்தபோது தமிழ்ப் பகுதிகளில் சிங்களக் குடியேற்றத்தைச் செய்து வந்தது. அது இன்னும் தொடர்கின்றது. இந்த அரசையும் புலிகளையும் விமர்சிக்கும் நீங்கள், புலிகளுக்கும் அரசுக்கும் ஆலவட்டம் பிடிக்கும் மற்றப் பத்திரிகைகள் போல் இருக்காமல், ஜனநாயகவாதிகள் என்றும் தனித்துவமானவர்கள் என்றும் கூறிக்கொண்டு உண்மை விடயங்களை ஏன் மறைக்கின்றீர்கள்?"* என்ற பல கேள்விகளை எழுப்பி உள்ளார்.

கடந்த பல வருடங்களாக எமது பத்திரிகையை படித்து வருகின்றார் என்று அவர் கூறியுள்ளதால், அவர் கேட்ட பல கேள்விகளுக்கு எமது பத்திரிகைகளில் விளக்கங்கள் வந்துள்ளன. இருந்த பொழுதும் அவர் பல கேள்விகளைக் கேட்ட அடிப்படையில் - கண்ணோட்டம் வாசகன் என்ற அடிப்படையிலும், ஈ.பி.ஆர்.எல்.எப். உறுப்பினன் என்ற அடிப்படையிலும் சில விளக்கங்களை கொடுக்க விரும்புகின்றேன்.

முதலாவதாக, மன்னார் தமிழ்ச் செல்வன் இன்று நடக்கும் யுத்தத்தை எவ்வாறு நோக்குகின்றார். தமிழீழத்துக்கான யுத்தமா? அல்லது ஓர் அராஜகக் கும்பல் தன்னை பாதுகாத்துக் கொள்ள யுத்தம் நடாத்துகின்றதா?

ஈ.பி.ஆர்.எல்.எப். புலிகளை பாசிசவாதிகள், கொலைகாரர்கள், அராஜகவாதிகள், போராட்டத்தைச் சீரழித்தவர்கள் எனக் கூறுகின்றது. உண்மைதான். அவர்கள் இவற்றில் இருந்து எவ்வாறு வேறுபட்டுள்ளார்கள்?

முதலாவதாக ஓர் விடுதலைப் போராட்டத்தைக் கொண்டு நடாத்தும் தலைவனுக்கு, எதிரி யார்? நண்பன் யார்? என்று தெரிய வேண்டும். போராட்டத்தை எவ்வாறு வழி நடாத்துவது என்று தெரிய வேண்டும். மக்களின் துன்பங்கள் துயரங்கள் புரிய வேண்டும். சமூகத்தைப் பற்றி தெளிவான பார்வையும் தூர நோக்கும் இருக்க வேண்டும். பிராந்திய, சர்வதேச அரசியல் அணுகுமுறைகள் பற்றி புரிந்திருக்க வேண்டும்....

இவற்றுக்கு மேலால் மனிதப் பண்பு, மனிதத்துவம் இருக்க வேண்டும். இவற்றில் எவைதான் புலிகளுக்கு உள்ளது?

ஆரம்பத்தில் (1986களில்), தமிழ் இயக்கங்களை அழிக்க முற்பட்டார்கள் இதனால் ரெலோ, ஈ.பி.ஆர். எல்.எப்., புளொட்டைச் சார்ந்த நூற்றுக்கணக்கானோரை கொன்று குவித்தார்கள். கேட்டால், இந்தியாவின் ஏஜென்டுகள், சமூக விரோதிகள் என்றார்கள். (புலிகளின் பிரதித் தலைவர் மாத்தையாவும் கூட 'இந்தியன் ஏஜென்ட்' என்றே சுட்டுக் கொல்லப்பட்டார்.)

ஆனால் இயக்கங்களுக்கிடையில் கருத்து முரண்பாடுகள், கொள்கை முரண்பாடுகள் இருந்தபோதும் கூட சகல இயக்கங்களும் சிறிலங்கா அரசுக்கெதிராகவே போராடின. புலிகள் அவர்களை தடைசெய்த பின் அவர்கள் போராடுவதற்கான உரிமைகள் கூட மறுக்கப்பட்ட பின், அவர்கள் புலிகளுக்கெதிராகவும் போராட நிர்ப்பந்திக்கப்பட்டார்கள்.

சரியான தலைமைத்துவமாக இருந்தால், சகல விடுதலை இயக்கங்களையும் ஓர் கூட்டமைப்புக்குள் கொண்டு வந்திருக்க முடியும். ஆனால் ஈ.என்.எல்.எப். என்ற கூட்டமைப்பையே இல்லாமல் செய்தவர் தான் புலிகளின் தலைவர் பிரபாகரன்.

அதுமாத்திரமல்ல, புலிகளை விமர்சித்த பல புத்திஜீவிகளைக் கொன்று குவித்தார்கள். மொத்தத்தில் நண்பர்களாக்கிக் கொள்ள வேண்டிய சகலரையும் பகைத்துக் கொண்டார்கள். அவர்களை எதிரியாகவே கணித்து கொன்று குவித்தார்கள்.

ஏன், ஈ.பி.ஆர்.எல்.எப். ஐயும், தமிழ் தேசிய இராணுவத்தையும் அழிப்பதற்கு பிரேமதாசா அரசிடம் இரகசியமாக ஆயுதம் வேண்டினார்கள். இராணுவத்துடனும், அதிரடிப் படையுடனும் சேர்ந்து அவர்களை கொன்று குவித்தார்கள்.

இவர்கள் கொலைகாரர்கள், அராஜவாதிகள் இல்லாமல் வேறு யார்?

ஏனைய இயக்கங்களை சமூக விரோதிகள் என்கின்றார்கள்? சகல இயக்கங்களும் புனிதமானவை என்று பாட்டுப்பாட விரும்பவில்லை. விடுதலை நோக்கமாகக் கொண்ட செயற்பாட்டில் பல தவறுகள் நடந்திருக்கலாம். அவை திருத்தப்பட வேண்டியவை. ஏனைய இயக்கங்களுடன் ஒப்பிடுகையில், புலிகள் எத்தனை ஆயிரம் சமூக விரோதச் செயல்களில் ஈடுபட்டுள்ளார்கள். அதனை இங்கு பட்டியல் போட முடியாது.

ஆனால் 24 மணிநேரத்தில் யாழ் மக்களை வெளியேற்றிய பின் எத்தனை வீடுகள் கொள்ளையடிக்கப்பட்டன; எத்தனை வீட்டுக்காரர் பார்த்து நிற்க அவர்கள் வீடுகள் கொள்ளையடிக்கப்பட்டன. இராணுவம் வந்தால் எடுத்துவிடுமாம். அதற்காக விலை உயர்ந்த பொருட்களை அவர்கள் பாதுகாப்பிற்கு எடுத்துச் செல்கின்றார்களாம். இது அண்மைய சம்பவம்.

இதற்கு முதல் எத்தனை சம்பவங்கள்... யார் சமூக விரோதிகள்? நண்பர்களை அழிக்க எதிரியுடன் கூட்டுச்சேர்ந்த முதலாவது இயக்கம் புலிகளே. இதனை அவர்கள் இல்லை என்று கூறட்டும் பார்க்கலாம். தாங்கள்தான் ஒரே இயக்கம் என்பதுவும், மற்றவர்களை ஆயுத பலத்தால் அழிப்பதுவும், பாசிசம் இல்லாமல் வேறென்ன?

இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தியைக் கொலை செய்தார்கள். இதில் சம்பந்தப்பட்ட ஒற்றைக்கண் சிவராசன் உட்பட (பத்மநாபாவையும் இவனே கொலை செய்தான்) பல பேர் இந்தியாவிலேயே தற்கொலை செய்து கொண்டார்கள். இன்று வரை தாம் கொல்லவில்லை என்கின்றார்கள்.

வடமாகாணத்திலிருந்து அத்தனை முஸ்லீம்களையும் வெளியேற்றினார்கள். மொத்தத்தில் சக இயக்கங்களை எதிரிகளாக்கிக் கொண்டார்கள், இந்தியாவை எதிரியாக்கிக் கொண்டார்கள், முழு முஸ்லீம் மக்களையும் எதிரிகளாக்கிக் கொண்டார்கள்.

இவர்களின் அராஜக நடவடிக்கையால் இறுதியாக முழுத்தமிழ் மக்களையுமே எதிரிகளாக்கிக் கொண்டுள்ளார்கள். (யாழ்ப்பாணத்துக்குச் சென்று மக்கள் மீளக் குடியேறியதைக் கண்டித்து புலிகளின் உளவுப் பிரிவு விடுத்த துண்டுப் பிரசுரத்தில் மக்களை எச்சரித்துள்ளதையும் காணலாம்)

யார் யார் நண்பர்களாக இருக்க வேண்டுமோ அவர்கள் எல்லோரையும் எதிரிகளாக்கினார்கள். இவர்கள் விடுதலைப் போராட்டத்தைச் சீரழிக்காமல் வேறென்ன செய்தார்கள்?

ஓர் விடுதலைப் போராட்டத்தில் வன்முறை தவிர்க்க முடியாமல் போகலாம். ஆனால் வன்முறையே விடுதலைப் போராட்டமல்ல. உலக நாடுகளின் ஒத்துழைப்பு வேண்டும். உரிமைக்காக போராடும் இனத்தின் பங்களிப்பு வேண்டும்.

இவை எதுவும் இல்லாமல் அப்பாவிகளை கொலை செய்து குவிப்பதும் (அவர்கள் யாராக இருந்தாலென்ன), இராணுவத்தின் மண்டை ஓட்டை எண்ணுவதும் மாத்திரம் விடுதலைப் போராட்டமாகாது. போராட்டத்தில் வன்முறை ஓர் அங்கம் மாத்திரமே. இதனைப் புரிந்துகொள்ள முடியாதவர்கள் எவ்வாறு போராட்டத்தை வழி நடத்தலாம்?

எனவேதான் ஈ.பி.ஆர்.எல்.எப். புலிகளைக் கண்டிக்கிறது, புலிகளை விமர்சிக்கின்றது, வட-கிழக்கில் ஜனநாயக சூழல் ஒன்று ஏற்பட வேண்டுமென குரல் கொடுக்கின்றது.

ஆரோக்கியமானவிமர்சனங்கள் ஆராயப்பட்டாலே எதுவும் திருத்தப்படலாம். விமர்சனங்களுக்கு வாய்ப்பூட்டு போட்டால் அராஜகம் தான் தலைவிரித்தாடும் இன்று அதுதான் நடைபெறுகின்றது.

ஈ.பி.ஆர்.எல்.எப். ஐப் பொறுத்தவரை நீதியான சமாதானத் தீர்வொன்றையே அது வேண்டி நிற்கின்றது. அதற்காக சகல ஜனநாயக வழிமுறைகளிலும் அது போராடத் தயாராக இருக்கின்றது.

பிரேமதாசா அரசு புலிகளுடன் கூட்டுச்சேர்ந்து ஈ.பி.ஆர்.எல்.எப். மாகாணசபையை கலைத்தபோது அதனை எதிர்த்தோம். சந்திரிகா முற்போக்கானவர், அரசியல் தீர்வொன்றை கொண்டுவருவதாக உறுதி அளித்ததால் அதனை ஆதரித்தோம். ஆனால் புலிகளின் பிழையான அணுகுமுறையாலேயே பேச்சுவார்த்தை முறிவடைந்து யுத்தம் ஒன்று ஆரம்பித்தது.

பேச்சுவார்த்தையை முறியடித்தவர்கள் புலிகளே. இதற்காகஇன்று நடக்கும் யுத்தம் சரியானதென்பதல்ல. எனவேதான் யுத்த நிறுத்தம் ஒன்று ஏற்பட்டு, மூன்றாவது தரப்பு மத்தியஸ்தத்துடன் சகல தரப்பினரையும் உள்ளடக்கிய பேச்சுவார்த்தை நடாத்தப்பட வேண்டுமெனக் கோருகின்றோம்.

இன்றைய அரசுக்கோ, ஐக்கிய தேசியக் கட்சிக்கோ இப்பிரச்சினையைத் தீர்க்கக் கூடிய வல்லமை இல்லை என்பதே ஈ.பி.ஆர்.எல்.எப். இன் அபிப்பிராயம். எனவே இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான மாற்று வழிகளை ஈ.பி.ஆர்.எல்.எப். சிந்திக்கும், சரியானவற்றை கடைப்பிடிக்கும். இதில் ஒன்றே மூன்றாவது தரப்பின் மத்தியஸ்தம் என்பது.

எனவே தேர்தல் நடந்து யார் பதவிக்கு வந்தாலும், இப்பிரச்சினை தீருமென நாம் எதிர்பார்க்கவில்லை. புலிகள் தொடர்ந்து யுத்தம் புரிவதால் தமிழீழம் கிடைத்துவிடும், அல்லது தீர்வு வந்துவிடும் என நினைத்தால் மன்னார் தமிழ்ச்செல்வனின் பார்வையும் தவறென்பதே அர்த்தமாகும்.

ஏனெனில் இலங்கையில் தமிழீழம் என்ற ஒன்று உருவாவதை உலகில் எந்தநாடும் இதுவரை அங்கீகரிக்கவில்லை. சரியான வழிமுறையைகடைப்பிடித்து, சிறீலங்கா அரசை தோலுரித்து காட்டி இருந்தால், இந்தியா சில சமயம் அங்கீகரித்திருக்கக் கூடும். ஆனால் அதற்கான சகல வழிகளும் மூடப்பட்டு விட்டன.

இன்று புலிகளின் நடவடிக்கைகள், அவர்களை சர்வதேசப் பயங்கரவாதிகளாகவே சித்தரிக்கின்றன. இந்நிலையில் புலிகளின் வன்முறையால் தனிநாடு கிடைத்துவிடும் என்று நாம் நினைத்தால் தப்புக் கணக்கு போடுகின்றோம் என்றே அர்த்தமாகும்.

எனவே எஸ்.எல்.எஃப்.பி. யோ அல்லது யூ.என்.பி. யோ ஆட்சிக்கு வந்தால் எதுவும் தராது, ஆகவே புலிகளின் வன்முறை சரியெனில், நாம் பிழையான போராட்டத்தை ஊக்குவிப்பவர்களாகவே இருப்போம்.

எனவே நீதியான கோரிக்கைகளுக்காக எவ்வாறு சர்வதேச ஆதரவை வென்றெடுப்பது, அதனூடு எமது பிரச்சினைக்கு தீர்வு காண்பது என்பதே எமது அணுகுமுறையாக இருக்க முடியும்.

இறுதியாக, தமிழ்ச்செல்வன் சிங்களக் குடியேற்றத்தைப் பற்றி குறிப்பிட்டிருந்தார். ஈ.பி.ஆர்.எல்.எப். மாகாணசபையை அமைத்த பொழுது திருகோணமலையில் காலம் காலமாக சீவித்த சிங்கள மக்களே, தமது மூதாதையரின் இருப்பிடங்களுக்குப் போனார்கள். ஆனால் மீண்டும் எப்பொழுது திருமலை இராணுவக் கட்டுப்பாட்டிற்குள் வந்ததோ, அன்று மீண்டும் சிங்கள மக்கள் குடியேறத் தொடங்கினார்கள். (இராணுவக் கட்டுப்பாட்டிற்குள் திருமலை வந்த பெருமையும் புலிகளையே சாரும்.)

எனவே, என்று யுத்தம் நின்று வட-கிழக்கில் ஓர் தமிழ்க்கட்சி அதிகாரத்துக்கு வருகின்றதோ அன்றுதான் குடியேற்றங்களை முற்றுமுழுதாக நிறுத்த முடியும்.

எனவே இன்றைய அவசரத் தேவை தீர்வும், வட-கிழக்கில் ஜனநாயக ரீதியில் தேர்ந்தெடுக்கப்பட்ட அரச அதிகாரமுமே. தமிழ்ச்செல்வன் இவற்றை புரிந்து கொள்வார் என நம்புகின்றேன்.

ந. சுந்தரலிங்கம்,
புழல் அகதி முகாம்,
சென்னை.







## யாழ்ப்பாணக் கடிதத்திலிருந்து....

இங்கு நிலமை மோசமடைந்து செல்கிறது. ரவுணுக்குப் போவதற்கு 7,8 இடங்களில் இறங்க வேண்டும். கெடுபிடி கொஞ்சம் கூடுதலாக உள்ளது. என்னை இரண்டு கிழமைக்கு முன்னர் அலுவலகத்திற்குப் போகும்போது மறித்து வைத்திருந்தார்கள். இன்னும் பலரையும். பின்னர் பிள்ளையார் கோவிலுக்குக் கொண்டு சென்று தமது 'லிஸ்ரில்' எனது பெயர் இருக்கிறதா எனப் பார்த்த பின்னர்தான் விட்டார்கள். முல்லைத்தீவுத் தாக்குதலின் எதிரொலி இங்கு கேட்டது.

மேலும் 'வெள்ளை வான்' திரிவதாக அறிகிறோம். ஆனால் இரவில் தான் அதன் பயணம் ஆரம்பமாகிறத். தேவையானவர்களை வீட்டில் சென்று ஏற்றிச் செல்லுமாம். நீர்வேலி, கல்வியங்காடு, கந்தர்மடம் போன்ற இடங்களில் வெள்ளோட்டம் நடைபெற்றதாக அறிகிறோம். அப்பாவிகள் தான் ஏற்றிச் செல்லப் படுகிறார்களாம்.

நேற்று எனக்குத் தெரிந்த ஒருவர் மாலைநேர வகுப்பிற்குச் சென்ற போது பிடித்துள்ளார்கள். தேடித் திரிந்த வீட்டார் விசாரித்தபோது, இப்போதைக்கு விடமாட்டோம் என்று தெரிவித்துள்ளனர்.

இப்போது யாழ் மக்கள் மத்தியில் பயம் சிறிது சிறிதாகக் குடிகொள்ளத் தொடங்கிவிட்டது. இப்போதுள்ள நிலை தொடரும் பட்சத்தில் 1983இல் இருந்த இராணுவ பயம் மக்கள் மத்தியில் உருவாகலாம்.

மேலும் தனங்கிளப்பு சம்பவங்களின் பின்னர் சாவகச்சேரி பகுதியில் ☞

படிப்பகம்

www.padippakam.com



இளமட்டங்களை பிடித்துச் சென்றதாக அறிகிறோம்.

உரும்பிராயைச் சேர்ந்த பிரகாஸ் (20) என்ற இளைஞனுக்கு என்ன நடந்ததென்று தெரியாமல் பெற்றோர் அங்கலாய்த்துத் திரிகின்றனர்.

வேறு செய்திகள் இவ்வாறிருக்கின்றன.... இராணுவத்தின் முற்று முழுதான கட்டுப்பாட்டிலில்லாத யாழ் குடாநாட்டின் பகுதிகளிலிருந்து இராணுவத்தின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிக்குள் உள்ள உறவினர்களைப் பார்ப்பதற்காக கோண்டாவில் இராணுவ நுழைவாயிலில் அனுமதி பெறச் சென்றதன் பின்னரே பிரகாஸ் காணாமல் போனதாக் அறியப்படுகின்றது.

**இராணுவத்தினரால் அமைக்கப்பட்டுள்ள பாதுகாப்பு வேலி கே.கே. எஸ். வீதி, பலாலி வீதி ஆகிய இரு பிரதான வீதிகளைப் பிரித்து 4 கிலோமீற்றர் தூரம் அமைக்கப்பட்டு பின்னர் பின்னர் கே.கே.எஸ். வீதியை தட்டாதெருச் சந்தியூடாக ஊடறுத்து காக்கைதீவுப் பக்கமாகவும், சுன்னாகம் நாகம்ஸ் படமாளிகைக்கு அண்மையாக கே.கே.எஸ். வீதியை ஊடறுத்து அளவெட்டிப் பக்கமாகவும் செல்கிறது.**

இந்த வேலி அமைப்பினால் உரும்பிராய், ஊரேழு, கோண்டாவில், கொக்குவில், திருநெல்வேலி ஆகிய ஊர்களின் பெரும்பகுதி இராணுவக் கட்டுப்பாட்டிலும் ஏனைய பகுதிகள் கட்டுப்பாடு குறைந்தும் காணப்படுகின்றன.

இந்த வேலி அமைப்பினால் மக்கள் தமது அன்றாட அலுவல்களை மேற்கொள்வதில் பெருஞ் சிரமங்களை எதிர்நோக்குகிறார்கள். கட்டுப்பாடு குறைந்த, கட்டுப்பாட்டுக்குட்பட்ட பகுதிகளுக்கு மக்கள் எதிர் எதிர் திசைகளிலிருந்து செல்லும்போது பெருஞ்சிரமங்களை எதிர்நோக்குகிறார்கள்.

இரண்டு வாசல்களே உள்ளன. 1. கோண்டாவில் டிப்போ முன்வீதி, 2. தட்டா தெருச் சந்தி. இவ்விரு நுழைவாயில்களும் பெரும்பாலான நாட்களுக்கு மூடப்பட்டே இருக்கும்.

டிப்போ முன்வீதியினூடாக கோண்டாவிலிலுள்ள உறவினர் வீட்டிற்கு செல்வதற்கு முயற்சி செய்ததன் பின்னர் பிரகாஸ் காணாமல் போனான்.

இப்படிக்கு,
யாழ்ப்பணத்திலிருந்து,
சுப்பிரமணி.

# போராட்டம் என்ற பெயரில் புலிகள், இனத்தையே அழித்துக் கொண்டிருக்கிறார்கள்!




அன்பின் ஆசிரியருக்கு,

உங்களால் வெளியிடப்படும் புதியகண்ணோட்டம் பத்திரிகையை தொடர்ந்து வாசித்து வருபவன் என்பதால் அவ்வப்போது அதில் வாசகன் என்ற முறையில் சில சரிபிழைகளை சுட்டிக்காட்ட விரும்பியிருந்தாலும், நான் வெளிநாட்டில் வாழ்வதால் எனது கருத்துக்கள் உண்மைக்குப் புறம்பாக இருக்குமோ என்ற ஐயப்பாட்டில் எழுதுவதில்லை.

உங்கள் வெளியீடு-28இல் 6ம் 7ம் பக்கங்களை வாசகர்களின் கடிதங்களுக்காக ஒதுக்கியிருந்தீர்கள். அக்கடிதங்களில் சிலவற்றைப் பற்றி எனது கருத்தைக் கூற நினைத்தாலும், இம்முறை முக்கியமாக, தனது சொந்தப் பெயரை சொல்ல விரும்பாத திருமலைப் பொதுமகன் எழுதிய கடிதம் பற்றி சில வரிகள் எழுதலாம் என நினைக்கின்றேன்.

இப் பொதுமகனார் கடிதத்தின் தலையங்கமே 'புலிகளைத் தாக்கி எழுத துரோகிகளுக்கு என்ன தகுதி இருக்கிறது?' என்று ஆரம்பமாகிறது. நீங்கள் ஜனநாயகம், சமாதானம், அமைதி என்ற அடிப்படையில், ஈழமக்கள் தன்மானத்தோடு அவர்களது சொந்தமண்ணில் வாழ வேண்டும் என்று கடந்த பல ஆண்டுகளாக ஆயுதப் போராட்ட மூலமும், புலிகளால் தடை செய்யப்பட்ட பின் ஜனநாயக முறையிலும் போராடி வருவதால், இப்படியான புலிப் பொதுமகனின் கடிதத்தையும் உங்கள் பத்திரிகையில் போட்டு, உங்கள் ஜனநாயகத்தின் உச்ச நிலைமையை காட்டியிருந்தீர்கள். அதை நான் பாராட்டுகிறேன்.

அதேவேளை இந்தப் பொதுமகன், புலிகளின் பத்திரிகையில் சுதந்திரமாக யாரும், 'ஈழத்தில் என்ன நடக்கிறது, புலிகளின் போராட்டப்பாதையில் உள்ள சரிபிழைகள், அவர்களின் இராஜதந்திரமற்ற போராட்டத்தால் ஈழப்போராட்டம் சின்னாபின்னப்பட்டது மட்டுமல்ல, ஈழப்பகுதியே சுடுகாடாக்கப்பட்டுள்ளது' என்பதை எழுதினால் அதைப் பிரசுரிக்கும் ஜனநாயகம் புலிகளால் வெளியிடப்படும் பத்திரிகைகட்கு மட்டுமல்ல அதன் பினாமிப் பத்திரிகைகட்கும் அந்தச் சுதந்திரம், ஜனநாயகம் இல்லை என்பதை உணர்வாரா?

அனைத்துப் பிழைகளுக்கும் அப்பால் இன்றும் உறுதி குலையாமல் போராடுகிறார்கள் என்றும், சிறு சிறு பிழைகள் வருவது சகஜம் என்று தொடரும் பொதுமகன், உண்மையில் ஈழ மக்களின் போராட்டத்தை சில வருடங்கள் பின்னால் திரும்பிப் பார்த்தாரேயானால், உண்மையில் ஈழப்போராட்டம் சிறு சிறு பிழைகளோடு முன்னேறியுள்ளதா? அல்லது சரித்திரத்தில் என்றுமில்லாதவாறு ஓர் பெரும் அழிவையே தமிழினத்திற்கு கொண்டுவந்துள்ளதா? என்பதை உணரமுடியும்.

ஈழப்போராட்டம் 1948ல் இருந்து ஜனநாயக முறையில் பல வழிகளிலும் போராடப்பட்டு (காந்தியவழியில்), அவை சரிவராது போகவே, 1975க்குப் பின் சில சிறிய ஆயுதக் குழுக்களால் அங்கொரு கொலையும் இங்கொரு கொள்ளையுமாக ஆரம்பமானது. அது, 1983ம் ஆண்டு இனக்கலவரத்தின் பின் இந்திய உதவியோடு, உலகளாவிய பிரச்சினைகளில் எமது பிரச்சினையும் ஒன்றாக உலகிற்கு காண்பிக்கக் கூடியதாக இருந்தது.

இந்தக் காலத்தில் பொதுமகன் கூறும் புலிகளைவிட மற்றும் பல போராட்ட அமைப்புக்கள் இருந்தன. அவற்றில் ஈரோஸ், ஈ.பி.ஆர். எல்.எப்., புளொட், ரெலோ ஆகியவற்றைக் குறிப்பிடலாம். இவையெல்லாம் இருந்ததால்தான், உலகநாடுகளில் ஈழத்தமிழர் பிரச்சினையைப் பிரச்சாரப்படுத்தக் கூடியதாகவும், இந்தியா போன்ற நாடுகள் எமக்கு உதவும் நிலையும் உருவானது.

ஆனால் 1986ஆம் ஆண்டுக் காலத்தில் புலிகள் ஈழப்போராட்டத்தின் ஒட்டு மொத்த குத்தகையையும் ஆயுத முனையில், மற்றைய அமைப்புக்களை விரட்டியதன் மூலம் எடுத்துக் கொண்டனர். ஈழப் போராட்டம், விரும்பி ஈழமக்களால் ஜனநாயக முறையில் புலிகளுக்கு தாரைவார்த்துக் கொடுக்கப்பட்டது அல்ல, புலிகள் தமது ஆதிக்கத்தை ஈழத்தில் நிலைநிறுத்த ஆயுத முனையில் எடுத்துக் கொண்டதாகும்.

புலிகளின் ஆதிக்கத்துள் ஈழப் பகுதி வந்த பின், ஈழப்பகுதியில் மக்கள் ஜனநாயக முறையில் ஏதாவது செய்யக்கூடியதாக இருந்ததா? சுதந்திரமாக ஏதாவது கதைக்கக் கூடியதாக இருந்ததா? என்பதை இப்பெருமகன் அறிந்திருப்பார் என்பதில் எனக்கு எந்தவித ஐமிச்சமும் இல்லை.

ஈழப்பகுதியில் இருந்து ஆயிரக் கணக்கில் மக்கள் புலிகளால் விரட்டப்பட்டு உலகின் பல நாடுகளிலும்

தொடர்ச்சி 9




# 'வீரம்' குறைந்த வெளிநாட்டுத் தமிழர்கள்



அன்புடன் ஆசிரியருக்கு,

வணக்கம். உங்கள் புதிய கண்ணோட்டம் அவ்வப்போது வெளிவரும் போதெல்லாம் வாசித்து வருபவர்களில் நானும் ஒருவன். ஆடி மாத இதழில் வாசகர் கடிதப் பகுதியில் பிரசுரிக்கப்பட்டிருந்த திருமலைப் பொதுமகனின் கடிதம் வாசித்தேன். அவரது கடிதத்தில் புதைந்திருக்கும் தேசப்பற்றையும், அக்கடிதத்தை உரிய இடம் கொடுத்துப் பிரசுரித்திருந்த உங்களது ஜனநாயக மரபையும் புரிந்து கொண்ட போது புல்லரிக்கின்றது. வெளிநாட்டுத் தமிழர்களில் எங்களைப் போன்ற ஒருசிலரின் அறியாமையை எண்ணி ஒரு கணம் வெட்கப்பட்டுக் கொண்டேன்.

இந்த அறியாமை இருளில், வெளிநாடுகளில் வாழ்ந்துவரும் ஒரு சில தமிழர்களின் மத்தியில் பின்வரும் வகையான சிந்தனைப் போக்கொன்று புரையோடி வருகின்றது. *வட-கிழக்கில் வாழும் மக்களுக்கு, தொடரும் இப்போராட்டம் எந்த வகையிலும் நன்மை தராது. மாறாக கடந்த 7 வருடத்தில், அதாவது இலங்கை இந்திய ஒப்பந்தம் நிர்மூலமாக்கப்பட்ட பின், தொடர்ச்சியான பின்னடைவுகளையே ஏற்படுத்தியுள்ளது. மக்களின் சமூக வாழ்வு சின்னாபின்னமாக்கப்பட்டு, மரணபயத்துடன் அன்றாடம் கஞ்சிக்காக கையேந்தி நிற்கும் நிலைக்குத் தள்ளப்பட்டு, கௌரவம், சுயமரியாதையை இழந்து பிராணிகள் போல் வாழும் நிலை படிப்படியாக ஏற்பட்டு வருகின்றது.*

இது போதாதென்று, இங்கு தொலைக்காட்சியில் வரும் வனவிலங்கு நிகழ்ச்சிகளில் கூட, காட்டு மிருகங்கள் மாமிச பட்சிகளினால் தாக்கப்படும்போது, தங்களது கன்றுகளை குட்டிகளைக் காப்பாற்றப் பகீரதப் பிரயத்தனம் செய்வதும், இதனாலேயே தாய் மிருகம் கொல்லப்படுவதும், முடியாத கட்டத்தில் தயக்கத்துடன் சோகமாகப் பிரிந்து செல்வதும் தத்ரூபமாக எடுத்துக் காட்டப்படுகின்றது. இது சாதாரண உயிரினங்களின் இயல்பென்றே கருதவேண்டியுள்ளது.

ஆனால் நாமோ, ஈழத்தில் எமது குழந்தைகளை போர்முனையிலும், தற்கொலைப் படையிலுமாக இணைத்து, அவ்வீரத்தைப் புகழ்கின்றோம். அதற்காக இங்கு விழா எடுக்கின்றோம்.

**தேசப்பற்றின் உண்மையான பரிமாணங்களைப் புரிந்து கொள்ள முடியாத எம்போன்ற அறியாமை இருளில் உள்ள ஒருசிலர், இவ்வாறான போராட்டப் போக்குகளை அசிங்கமானது என்றும் நிராகரிக்கப்பட வேண்டியது என்றும் கதைத்தும் எழுதியும் வருகிறார்கள்.**

இவர்களின் கோழைத்தனத்திற்கு இவர்கள் மேலும் வியாக்கியானம் கொடுக்க முனையும்போது, *'குறிப்பாக வெளிநாடுகளில் வாழும் நாம் குறைந்தபட்சம் மூன்றுவேளை சாப்பிடுகின்றோம். செல்லடி, ஹெலிதாக்குதல் என்று ஏதுமில்லை, வீதித்தடைகள் சோதனைகள் இல்லை என்றே கூறலாம். கைது செய்யப்படல் காணாமல் போதல் என்றெல்லாம் எவ்வளவு பயமாக இருக்கும் என்பதைப் படிப்படியாக மறந்துவிட்டோம், அல்லது இது பற்றி நாங்கள் அறிந்திருந்ததே இல்லை. பிள்ளைகளுக்கு இயலுமான வசதிகளைச் செய்து கொடுக்க முயல்கின்றோம். பாடசாலையால் பிள்ளை வரத் தாமதித்து விட்டாலே சிறிது பதட்டப்படுகிறோம். காலையும் மாலையும். கொலை, குண்டு வெடிப்பு, படுகாயம், மண்டையில் போடப்பட்டமை என்றெல்லாம் குரூரமான கொடுமையான செய்திகள் கேட்டு மனம் சிதைந்து விகாரமடையும் சூழ்நிலை குறைவு....*

*சுருக்கமாகச் சொல்வதானால் நாம் இங்கு உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு மரண பயத்துடன் வாழவில்லை.*

*இப்படியிருக்கும் நாம், இன்று வட-கிழக்கில் இவ்வளவு இன்னல்களுக்கு மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களின் பெயரால் தேசப்பற்று, விடுதலைப் போராட்டம் என்ற போர்வையில், அவர்கள் தொடர்ந்தும் சித்திரவதைப்படுவதை அனுமதிக்கக்கூடாது என்றும், எமது எதிர்காலச் சந்ததியினராகிய சிறுவர் சிறுமியர் சகல அடிப்படை வசதிகளையும் இழந்து வாழும் நிலை தொடர்வதும், அதிலும் வசதி குறைந்த துர்அதிர்ஷ்டவசமான குழந்தைகள் போர்முனைக்கென்று அனுப்பப்படுவதும் அனுமதிக்கக் கூடாத விடயங்கள்'* என்றும் யோசிக்கிறார்கள்.

இக் காரணங்களுக்காகத்தான் நான் முன்பு குறிப்பிட்ட வெளிநாட்டுத் தமிழர்களில், அறியாமை இருளில் வாழும் ஒரு சிலர், புலிகளின் அடிப்படைத் தத்துவமான "மூர்க்கத்தனமாகப் போர் தொடர்ந்தால் இறுதியில் வெற்றி கிட்டும்" என்ற கோட்பாட்டை நிராகரித்ததுடன், அவர்களுக்கு, இதற்கு மாற்றாக எந்த அணுகுமுறையையும் மேற்கொள்ளும் தன்மை அறவே இல்லை என்பதாலுமே புலிகளை நிராகரிக்க வேண்டும் என்று விளக்கம் வேறு சொல்கிறார்கள்.

வெளிநாட்டுத் தமிழர்களின் இந்தப்போக்கு, நீங்கள் உரிய இடம் கொடுத்துப் பிரசுரித்த திருமலைப் பொதுமகனின் கருத்தை கவனத்திலெடுக்காமலே, தான்தோன்றித்தனமாக ஏற்பட்டதென்பது, இப்போது எம் போன்றவர்களுக்கு விளங்குகின்றது.

வடக்கு-கிழக்கில் இவ்வளவு கஷ்டங்களுக்கு மத்தியில் வாழும் மக்களின் இன்றைய தேவையாக, 'போர் தொடரவேண்டும் என்றும், விட்டுக்கொடுக்க முடியா தென்றும், மாற்று அணுகுமுறைகள் கேவலமானது நிராகரிக்கப்பட வேண்டியது என்ற அடிப்படையையும் துல்லியமாக எமக்குச் சொல்லித் தந்த திருமலைப் பொதுமகனின் கருத்தும், உங்களது நடுநிலைப் பத்திரிகா தர்மமும் வாழ்க!

நீங்கள் எதிர்காலத்தில், இது போன்று போர் தொடங்க வேண்டும் என்று அவாவுடன் வாழுகின்ற பெரும்பான்மையான வட-கிழக்கு மக்களின் கருத்துக்களைப் பிரதிபலிக்கும் கடிதங்கள் கட்டுரைகளை பிரசுரிப்பதுடன், வட-கிழக்கில் நடக்கும் சிறு-சிறு 'அத்தியாவசியமான' மனித உரிமை மீறல்களையும் பெரிதுபடுத்தாமல் அடக்கி வாசித்தால் மக்கள் மத்தியில் குழப்பங்கள் குறையுமல்லவா?

எம்மைப் போன்று வட-கிழக்கு மக்களின் போர் வேட்கையைக் குறைத்து மதிப்பிடுபவர்களினால் போராட்டத்திற்கு ஏற்படக்கூடிய பின்னடைவும் குறையும் அல்லவா? உதவி செய்யாவிடினும் உபத்திரவம் செய்யாமலிருப்போம் என்று ஒதுங்கி இருப்பார்கள் அல்லவா?

வாழ்க போராட்டம்!

வளர்க உங்கள் தேசியப்பணி!

இப்படிக்கு,
பொதுமகன், வெளிநாடு.

www.padippakam.com



# மாகாண அரசாங்கமும் மாவீரர் சமாதிகளும்

இந்திய-இலங்கை ஒப்பந்தம் உருவாக்கப்பட்டு, அதனூடு மாகாணசபை ஏற்பாடுகள் 1988 ல் இலங்கையில் அமுலுக்கு வந்தன. ஆரம்பத்தில் இவற்றை ஆதரித்த புலிகள் பின்னர்மிகவும் அற்ப காரணங்களைக் காட்டி இந்திய அமைதிகாக்கும் படையுடன் யுத்தம் ஒன்றைத் தொடங்கினார்கள். இதனால் வடகிழக்கைத் தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் மாகாணசபைகள் உருவாக்கப்பட்டன.

## தமிழ் மாகாண தலைநகராக திருகோணமலை

ஆனால் ஈ.பி.ஆர்.எல்.எப். இன் முழு முயற்சியால் 1989ம் ஆண்டு திருகோணமலையைத் தலைநகராகக் கொண்டு வடகிழக்கு மாகாணசபை முதன் முதலாக ஸ்தாபிக்கப்பட்டது.

அன்றைய ஜனாதிபதியாக இருந்த ஜே.ஆர். ஜெயவர்த்தன அவர்கள் 'உங்கள் தலைநகரை, யாழ்ப்பாணத்திலேயோ அல்லது மட்டக்களப்பிலேயோ வைத்திருங்கள்' எனக் கூறியபோது, அதைன எதிர்த்து இந்திய அரசின் உதவியுடன் நாம் வடகிழக்கின் தலைநகராக திருகோணமல்லயை பிரகடனப்படுத்தினோம். பல வருடங்களாக தமிழ் மக்களின் கனவாக இருந்து வந்த திருகோணமலையைத் தலைநகராக்குவது என்ற விடயம் ஈ.பி.ஆர்.எல்.எப். அரசால் நிதர்சனமாக்கப்பட்டது.

## வரலாற்றின் முதல் தமிழ் அரச நிர்வாகத்தை நிறுவ எதிர்நீச்சல்

ஓர் அரசை நிறுவுவதற்கோ அல்லது அதற்கான பொறிமுறைகளை உருவாக்குவதற்கோ தேவையான அடிப்படை வசதிகள் அச்சமயத்தில் திருகோணமலையில் இருக்கவில்லை. சில ஆயிரம் மக்களைக் கொண்ட அச்சிறிய நகரத்தில் அரசு அலுவலர்கள், மாகாணசபை உறுப்பினர்கள், ஊழியர்கள் தங்குவதற்கு கூட வசதிகள் இருக்கவில்லை. எதுவுமே அற்ற சூனியத்திலிருந்துதான் நாம், நிர்வாக கட்டுமானங்களையும், அதற்கான பொறிமுறைகளையும் உருவாக்க வேண்டி இருந்தது.

ஒருபக்கம் புலிகள், மறுபக்கம் அரசு, இவ்விரு சக்திகளுமே மாகாணசபையை குழப்புவது, செயற்படாமற் செய்வது என்பதில் மிகவும் ஊக்கத்துடன் செயல்பட்டார்கள்.

மாகாண அரசின் உயர்மட்ட அதிகாரிகளில் இருந்து கீழ்மட்ட ஊழியர்கள் வரை புலிகளால் மிரட்டப்பட்டார்கள், கடத்தப்பட்டார்கள், கொலை செய்யப்பட்டார்கள். ஈ.பி.ஆர்.எல்.எஃப். இனது மாகாண அரசுடன் தொடர்பு வைத்திருப்பவர்களுக்கு மரணதண்டனை என விளம்பரப்படுத்தினார்கள். இதன் மூலம் முழு ம்க்கள் மனத்திலும் கிலியையும் பீதியையும் உருவாக்கினார்கள்.

மறுபுறத்தில், திருகோணமலையை தமிழர் தலைநகராக்க விரும்பாத அரசு, அங்கு செய்யப்பட வேண்டிய வேலைகள் அனைத்தையும் ஏதோ ஒருவிதத்தில் தடைசெய்தனர். அதிகாரங்களை பகிர்ந்தளிப்பதை காலதாமதப்படுத்தினர், மாகாண அரசு செய்ய முயற்சித்த பல வேலைகளுக்கு அதிகாரம் இல்லை என தடைவிதித்தனர். இன்னும் தம்மாலான முழு முயற்சிகளையும் செய்தனர்.

இவ்வளவு எதிர்ப்புகளுக்கு மத்தியிலுமே திருகோணமலையில் ஓர் அரசுக்கான நிர்வாகப் பொறிமுறை அமைக்கப்பட்டது.

ஈ.பி.ஆர்.எல்.எப். ஆட்சியில் இருந்த ஒன்றரை வருட காலத்தில் இவை நிறைவேற்றப்பட்டன. எமக்கு முன்னர் உருவாக்கப்பட்ட ஏனைய மாகாணசபைகள் என்ன செய்வது, எவ்வாறு செய்வது என குழம்பிப் போயிருந்த சூழ்நிலையில் ஈ.பி ஆர்.எல்.எஃப். இதனைச் சாதித்தது. புலிகளின் மரணதண்டனை என்ற அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும், வடகிழக்கை செல்வம் கொழிக்கும் பூமியாக்க வேண்டும் என்று கனாக்கண்ட பல அதிசிறந்த அதிகாரிகளின் ஒத்துழைப்புடன் இது நிறைவேற்றப்பட்டது. மாகாண அரசின் பல்வேறு பட்டஅமைச்சுக்கள் என இது விரிவடைந்தது.

## பல நூறு தோழர்களின் உயிர்த் தியாகத்தால் உருவானது

அன்று இவ்வாறான நெருக்கடிக்கு மத்தியில் உருவாக்கப்பட்ட வடகிழக்கிற்கான நிர்வாகமே இன்றும் திருமலையில் செயற்படுகின்றது. இன்று வடகிழக்கில் வாழும் தமிழ் பேசும் மக்கள் தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள கொழும்புக்கு வரவேண்டிய அவசியமில்லை. அவர்கள் எல்லாம் தமது தலைநகரான திருகோணமலைக்குச் செல்கின்றார்கள் என்றால் அதற்கான பெருமை ஈ.பி.ஆர்.எல்.எஃப். ஐயே சாரும்.

தமிழ் பேசும் மக்களுக்கான அவ்வாறான அரசொன்றையும், தலைநகரொன்றையும் உருவாக்க வேண்டுமென்பதில் அக்கறை கொண்ட பல ஈ.பி.ஆர்.எல்.எஃப். தோழர்கள் புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்டனர். அவர்களது அயரா உழைப்பினாலும் தியாகத்தினாலும் தான் இன்று வடகிழக்கின் தலைநகராக திருமலை தலைநிமிர்ந்து நிற்கின்றது.

அதுமாத்திரமல்ல, திருகோணமலை நகரத்தில் அடாத்தாக வசித்துவந்த ஆயிரக்கணக்கான சிங்கள மக்கள் தமது சொந்த இடங்களுக்குப் போக வேண்டியேற்பட்டது. அரசின் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் தடை செய்யப்பட்டன. இவ் வேலைகளுக்கு இந்திய அரசும் இந்திய அமைதி காக்கும் படையும் மிகவும் ஒத்தாசையாகஇருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.




ஆனால் அவ்வாறு உருவாக்கப்பட்ட மாகாண அரசையும், அதன் நிர்வாகப் பொறிமுறையையும் சீர்குலைப்பதில் புலிகளும் அரசும் இணைந்து செயற்பட்டன. புலிகளுக்கும் அரசுக்கும் இடையில் ஏற்பட்ட தேன்நிலவுக் காலத்தில், இவ் அமைச்சுக்கள் யாவுமே கொள்ளையடிக்கப்பட்டன. மின் விசிறிகள் தொடக்கம், கொம்ப்யூட்டர் வரை அரச வாகனங்களும் இவர்களால் கொள்ளையடிக்கப்பட்டன. அரசும் கைகட்டி வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது. இருந்த பொழுதும் ஏற்படுத்தப்பட்ட நிர்வாகஅமைப்பு முறையையோ, இடத்தையோ அரசாலோ, புலிகளாலோ மாற்ற முடியவில்லை. ஈ.பி.ஆர்.எல்.எஃப். என்ன செய்தது என்று கேட்போருக்கு இது ஓர் சின்ன உதாரணம் மாத்திரமே.

## வடகிழக்கில் புலிகள் நடாத்திய சமாந்தர அரசாங்கம்

ஆனால் அதேசமயம் வடக்கில் சிறிலங்கா அரசுக்கு சமாந்தரமாக 1990களில் புலிகள் ஓர் நிர்வாகத்தை நடாத்துகின்றார்கள் என்று பாரியளவில் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் விளம்பரப்படுத்தப்பட்டது. புலிகளின் நிர்வாகம் எவ்வாறு இருந்தது என்பதையும் சிறிது சுருக்கமாய் பார்ப்போம்.

தமிழீழ காவற்படை (Police) உருவாக்கப்பட்டது. தமிழீழ நீதிமன்றம் உருவாக்கப்பட்டது. ஏனைய வரி அறவிடுதல் போன்ற விடயங்கள் ஏற்படுத்தப்பட்டன என அறிவிக்கப்பட்டது. மொத்தத்தில் எங்கும் புலி, எதிலும் புலி என்ற நிலையே இருப்பதாகவும் கூறப்பட்டது.

உண்மைதான், புலி உறுப்பினர்களைக் கொண்ட ஓர் காவற்படை உருவாக்கப்பட்டது. பச்சிளம் சிறார்களைக் கொண்ட நீதிமன்றம் உருவாக்கப்பட்டது. இவர்கள் பாடசாலையில் குறைந்தபட்சம் சாதாரணதரம் வரையிலான கல்வித்தகைமையை கொண்டிருந்தார்களா என்றால், இல்லை என்றே பதில் வருகின்றது. இவர்கள் தான் பல சமூகப் பிரச்சினைகளையும் கிரிமினல் குற்றங்களையும் விசாரிக்கும் நீதிபதிகள்.

உண்மையில் புலிகள் ஏற்படுத்தி இருந்ததெல்லாம் வெறும் இராணுவ அடக்குமுறைகள் மாத்திரமே.

நெல் அறுவடை செய்தால் புலிகளுக்கே விற்க வேண்டும். யாராவது வீட்டை விட்டு வெளியேறினால், வீட்டைப் புலிகளிடம் கொடுக்க வேண்டும். கடைக்காரர்கள் வரி கட்ட வேண்டும். அரசு ஊழியர்கள் கப்பம் கட்ட வேண்டும். சிறுவிவசாயிகள் வரி கட்ட வேண்டும். குடாநாட்டை விட்டு வெளியேறுவதானால் அனுமதி பெற வேண்டும். அதற்கு ஆயிரங்களாகவோ இலட்சங்களாகவோ கொடுக்க வேண்டும். இதுதான் புலிகளின் நிர்வாகமாக இருந்தது.

இதனை விட தேங்காய் எண்ணையில் எப்படி வாகனமோட்டுவது, பனங்களியில் எப்படி சவர்க்காரம் செய்வது போன்ற பொருண்மிய மேம்பாட்டு வேலைகளும் ஆராயப்பட்டன. இவை எல்லாவற்றிற்கும் மேலாக மாவீரர் மயானங்களும், மாவீரர் பூங்காக்களும்தான் இவர்களால் அமைக்கப்பட்டன.

எனவே ஈ.பி.ஆர்.எல்.எப். இந்திய அரசாங்கத்துடன் இருந்தது, அவர்களுக்கு சேவகம் செய்தது என்று கூறுவோர்க்கு ஒன்றைத்தான் எம்மால் கூறமுடியும். இந்திய அரசாங்கத்தின் உதவியுடன் பல ஆக்கபூர்வமான வேலைகளைச் செய்தோம். அது இன்றும் நிலைத்து நிற்கின்றது.

புலிகளின் ஆக்கபூர்வமான வேலைகள் யாவும் இளஞ்சிறார்தனை கொலைக்களத்துக்கு அனுப்பி அவர்களுக்கு மாவீரர் சமாதி கட்டுவதே.




# மனித விடுதலைக்கு மாற்றுவழி உண்டா என்று தேட வேண்டும்



மனித வரலாறு முழுவதும் போராட்டத்தின் வரலாறுதான். வன்முறைப் போராட்டங்களின் ஊடாகவே மனித வரலாறு நகர்ந்து வந்திருக்கிறது. அவ்வாறு பார்க்கும்போது மனித விலங்கு ஒரு போரிடும் விலங்குதான். ஏனைய விலங்குகளை விட குரூரமானதாகவே எனக்குத் தோன்றுகிறது. இந்த வன்முறைப் போராட்டத்தை புரட்சி என்ற வகையில் ஒரு அரசியல் சித்தாந்தமாக வடிவமைத்தவர் கார்ல்மாக்ஸ்தான். ஆயினும் அவரது நோக்கம் உயர்வானது. சுரண்டல்அற்ற, ஏற்றத்தாழ்வுகள் அற்ற, அடக்குமுறைகள் அற்ற, போர்கள் அற்ற ஒரு சமூகத்தை உருவாக்க எல்லாத் தளைகளில் இருந்தும் விடுபட்ட ஒரு முழுமையான மனிதனை உருவாக்க ஆயுதம் தாங்கிய பாட்டாளிவர்க்கப் புரட்சியால்தான் முடியும் என்று அவர் நம்பினார். ஆனால் நாம் அறிந்த புரட்சிகளின் அனுபவம் அவரது நம்பிக்கையை உறுதிப்படுத்தவில்லை.

வன்முறை வன்முறையையே பிரசவிக்கின்றது. அது அடக்குவோரின் வன்முறையாயின் என்ன? அதற்கு எதிரான அடக்கப்படுவோரின் வன்முறையாய் இருந்தால் என்ன. இது ஒரு நச்சு வட்டமாகவே சுழல்கிறது என்பது தான் நமது அனுபவமும். வன்முறையின் ஊடாக மனித விடுதலை சாத்தியமா என்பதில் எனக்கு சந்தேகம் வந்துவிட்டது. ஆயுத உற்பத்தியாளரின் பணப்பைகளை நிரப்புவதற்கேஅது பெரிதும் பயன்படுகின்றது. அதனாலேயே நான் வன்முறைஅரசியலில் நம்பிக்கை இழந்தேன். மனித விடுதலைக்கு மாற்றுவழிகள் உண்டா என்று நாம் தேட வேண்டும்.

கலகம் பிறக்காமல் நியாயம் பிறக்காது என்பதை மனித இயற்கையில் ஒரு மாறா விதியாக நாம் ஒப்புக்கொண்டால் கலகத்தினால்-யுத்தத்தினால் ஏற்படும் பேரழிவுகளையும் இயல்பானது, தவிர்க்க முடியாதது என்று ஏற்க வேண்டியிருக்கும்; அதனை நியாயப்படுத்த வேண்டியிருக்கும். அது நம்மால் முடியவில்லை. நமக்கு அமைதி வேண்டும்; சமாதானம் வேண்டும்; விடுதலை வேண்டும். ஆனால் மனிதன் தொடர்ந்தும் போரிடுகிறான். ஒரு இனம் பிறிதொரு இனத்தை அடக்கவும், அடிமைப்படுத்தவும் ஆதிக்கம் செலுத்தவும் முயல்கின்றது. இது மானுடத்தின் நெருக்கடி, முரண்பாடு.

**– எம்.ஏ.நுஃமான் (நன்றி: மூன்றாவது மனிதன்)**

www.padippakam.com



## போராட்டம் என்ற பெயரில்....

(7ம் பக்கத் தொடர்ச்சி)

அரசியல்தஞ்சம் கோரியு அகதிகளாக வாழ் கிறார்கள். இவர்களின் எண்ணிக்கை 5 லட் சத்திற்கு மேலென பத்திரிகைகள் கூறுகின் றன. இம்மக்கள் இன்று ஜனநாயகம் என்றால் என்ன, சுதந்திரம் என்றால் என்ன, அமைதி என்றால்.என்ன, சமாதானம்என்றால் என்ன என்பதை அனுபவரீதியாக நன்கு விளங்கியுள் ளார்கள். ஆனால் இத் திருமலைப் பொது மகன் ஈழப்பகுதியில் புலிகளின் சர்வாதிகார ஆட்சி ஒன்று வரவேண்டும் என்று விரும்புகி றாரோ என்னவோ?

சில புலி ஆதரவாளர்கள் கூறலாம், போராட்டகாலத்தில் சரி பிழைகள் பற்றியோ ஜனநாயகம், அமைதி, சமாதானம் பற்றியோ கதைக்க முடியாது என்று. ஆனால் உலக நாடுகளில் உரிமைக்காக போராடும் ஆயுதக் குழுக்களானாலும் சரி அரசியல் குழுக்களா னாலும் சரி, அவர்களுள் ஓர் ஜனநாயக பாரம்பரியம் உண்டு. பாலஸ்தீன தேசியசபை, ஆபிரிக்க தேசிய காங்கிரஸ், பொஸ்னிய அமைப்புக்கள், சிம்பாப்வே அமைப்புக்களைப் பார்த்தால் புரியும்.

எனவே ஈழ மக்களின் போராட்டத்தின் சரியான பாதை மக்களின் கருத்துச் சுதந்திரத் தடையாலும், புலிகளின் அரசியல் சாணக்கி யமற்ற ஆதிக்க எண்ணத்தாலும் அழிவுப் பாதையை நோக்கி நகரத் தொடங்கியது. இதை இந்திய அமைதிப்படை வந்த சமயம், புலிகள் பிரேமதாசாவோடு கூட்டுச் சேர்ந்து, இந்திய இலங்கை ஒப்பந்தத்தால் வந்த வட-கிழக்கு இணைந்த ஆட்சியை அழித்தன் மூலம் நன்கு உணரக்கூடிய அறிவு இத் திரு மலை பொதுமகனுக்கு இருக்குமென நினைக் கிறேன்.

ஜனநாயக வழிக்கு திரும்பிய, புலிகளால் ஆயுதமுனையில் விரட்டப்பட்ட அமைப்புக் கள் தமது தோழர்கள் நூற்றுக்கணக்கில் கொல்லப்பட்ட பின், அவர்கள் எங்கு இருக்க வேண்டும் என்று இப்பெருமகன் விரும்புகிறா ரோ... தன்னைப் போல் புலிகளின் ஜனநாயக ஆட்சியில் இருக்க வேண்டும் என விரும்பு கிறாரா?

இவர்களது சர்வாதிகாரப் போக்கு, அயல் நாடுகளில் தஞ்சம் கோரிய தமிழர்களைக் கூட விட்டுவைக்கவில்லை. ஈ.பி.ஆர்.எல்.எப். தோழர்கள் இந்தியாவில் கொலை செய்யப் பட்டது தொடக்கம் அனைத்து தமிழ் தலை வர்களையும் கொலை செய்தது யார்? இன்று தமிழர் பிரச்சினையை கதைக்க தமிழ் அரசி யல் தலைவர்களே இல்லாத நிலையை உரு வாக்கியவர்கள் தியாகிகளா? துரோகிகளா? எமது போராட்டத்தை இந்த நிலை கொண்டு வந்த இந்தியப் பிரதமர் ராஜீவை படுகோழைத் தனமாக கொலைசெய்து இந்திய ஆதரவை மட்டுமல்ல, உலக ஆதரவையே இழக்கச் செய்தவர்கள் தியாகிகளா? அல்லது துரோகி களா?

திருமலைப் பொதுமகன், யாழ் மக்களிற் காக ஈ.பி.ஆர்.எல்.எப். நீலிக்கண்ணீர் வடிப்ப தாகவும், அரசிடம் அரிசிக்கும் பருப்புக்கும் மக்கள் கை ஏந்தப்போவதை நியாயப்படுத்து வது கடைந்தெடுத்த துரோகத்தனம் என்றும் கூறுகிறார். எனது பார்வையிலே கூறினால் ஈ.பி.ஆர்.எல்.எப். ஆட்சி என்று முடிந்ததோ அன்றிலிருந்து, புலியாட்சியில் மக்கள் தமது தேவைகட்கெல்லாம்-அரசி பருப்புக்கு மட்டு மல்ல அனைத்து தேவைகட்கும்-அரசையே நம்பியிருந்தனர். மக்கள் மட்டுமல்ல, மக்களின் தயவில் புலிகளும் அரசின் பிச்சையை நம்பி யே தமது போராட்டத்தை நடாத்தினர். மக்க ளை மந்தைகளாகப் பார்த்தார்களே தவிர, மக்களாக அவர்களை மதித்து நடக்கவில்லை. தமது உயிர்வாழ்தலுக்கு மக்களைப் பகடைக் காய்களாகவும் கேடயமாகவும் பாவித்தனர்.

கடந்த சந்திரிகா-புலிகள் பேச்சுவார்த்தை யில் அவர்களின் முக்கியத்துவம் முதலாவ தாக அரிசிக்கும் பருப்புக்கும் மண்ணெண் ணெய்க்கும் தான் இருந்ததே தவிர அரசியல் தீர்வு பற்றி கதைப்பதாய் இருக்கவில்லை. அரிசி வர தாமதமானதால் புலிகள் அடிபாட் டை ஆரம்பித்தனர். முடிவு என்னவாச்சு?

கடந்த 2000 ஆண்டுகளாக நடக்காத சரித்திர நிகழ்ச்சி யாழில் நடந்தது. யாழ்ப் பாண மக்கள் இரவோடு இரவாக புலிகளால் யாழ்ப்பாணத்தை விட்டு விரட்டப்பட்டனர். பின் 2வாரமாக யாழ்ப்பாண வீடுகள் யாவும் இரவு பகலாக புலிகளால் கொள்ளையடிக்கப் பட்டன. இராணுவத்தோடு கடும்போர் நடாத் தப்போவதாக யாழ் மக்களுக்கு கூறிய புலிகள் அதற்கு ஒரு மாதத்திற்கு முன்பே தலைவர் உட்பட பரிவாரத்தோடு முல்லைத்தீவு பகு திக்கு மாறியிருந்தனர். மக்களையும் மண் ணையும் பாதுகாப்பதாகக் கூறி, மக்களை பலவிதத்திலும் பலாத்காரமாக சுரண்டி வாழ்ந்த புலிகள் அதை தொடரவே மக்களை யாழை விட்டு விரட்டினர். இதனால் எந்த ஒரு சிங்கள அரசும் செய்யாத வேலையை புலிகள் செய்து, இராணுவம் யாழ்ப்பாணத்தில் சிங்கக் கொடியேற்ற உதவினர். இதனால் சிறீலங்கா இராணுவம் எந்த அழிவுமின்றி யாழை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தது.

ஆனால் இதன்பின் வந்த அழிவுகளையும் வடமராட்சி தென்மராட்சியை விட்டு புலிகள் ஓடிய பின், மக்கள் திரும்ப யாழ் போய் 'சிவனே இனியாவது நிம்மதியாக வாழ்வோம்' என்றிருப்பதையும் இப்பெருமகனால் கூட உணரமுடியும். இங்கே நான் கூறுவது என்ன வென்றால் புலிகள்தான் அரிசிக்கும் பருப்புக் குமாக மக்கள் பின்னால் அலைகிறார்கள், மக்களல்ல. போராட்டம் என்ற பெயரில் இந் தக் கூட்டம் ஓர் இனத்தையே அழித்துக் கொண்டிருக்கிறது. கடந்த 10 வருடத்தை திருப்பிப் பார்த்தால் கழுதை தேய்ந்து கட்டெ றும்பானதுபோல் எமது போராட்டம் அழிந் துள்ளதை உணரலாம்.


எனவே இத்திருமலைப் பொதுமகனுக்கு அழிவுகளைப் பற்றிக் கவலையில்லாமல் இருக்கலாம். வரும் அழிவுகள் அரசினால் வருவதாகக் கூறலாம். ஆனால் உண்மை நிலையை அலசினால், புலிகளின் ஆதிக்க வெறிதான் இந்த அழிவுகட்கெல்லாம் கார ணம் என்பதைப் புரிந்துகொள்ள முடியும். இதை, எந்த சுயசிந்தனை உள்ளவர்களும் விளங்காமல் இருக்கமுடியாது.

இப்போது உள்ள நிலைமை வட-கிழக் கில் உள்ள அப்பாவிமக்களை நிம்மதியாக வாழவிடுவதா இல்லையா என்பதுதான். இப் பெருமகனார் உண்மையில் ஈழப்பகுதியில் தமிழ் மக்கள் தொடர்ந்து வாழ வேண்டுமெ னில் சாதாரண புலி நண்பர்கட்கு உண்மை நிலையை விளங்கப்படுத்த வேண்டும். சாதா ரண புலிப்போராளிகள் ஒன்றுமறியாதவர்கள். இவர்கள் எமது மக்களின் அழிவுக்கு, தாம் காரணமாக இருக்க கடைசி வரை விரும்ப மாட்டார்கள். புலித் தலைமையின் பிரச்சாரத் தை வேதவாக்காக எடுத்து, தம்மைத்தாமே அழிப்பதோடு தமிழ் மக்களின் அழிவுக்கும் காரணமாகிறார்கள்.

புலித் தலைமை தமது ஓர் சர்வாதிகார ஆட்சிக்காகத் தான், தம்மைப் பாவிக்கிறார்கள் என்பதை உணரும் நாள் வெகு தூரத்தில் இல்லை. பல புலிப் போராளிகள் (மாத்தையா உட்பட) புலிகளால் கொல்லப்பட்டுள்ளனர். இவர்கள் புலித்தலைமை மக்களின் அழிவுக்கு காரணமாகப் போகிறது என்று கூறி அதை நிற்பாட்ட முனைந்தவர்கள். எனவே, மக்க ளின் நலனில் அக்கறையுள்ள புலிப்போரா ளிகள் சிந்திக்கத் தொடங்கும்போது நிச்சய மாக நிலமைகள் மாறும்.

*எம். தேவதாஸ்,*
*லண்டன்.*

## குறுக்கெழுத்துப் போட்டி-26



### இடமிருந்து வலம்

1. அறுபதுக்கும் மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்ட தெகிவளை ரயில் நிலைய குண்டு வெடிப்பு தொடர்பாக கைதுசெய்யப்பட்டுள்ள புலி.
6. பாடசாலை முதல்வர்.
9. கர்ப்பமுற்ற பெண்களுக்கு உண்டாவது.
10. "நாங்கள் மக்களில்லாத இதை நேசிக்கவில் லை, மக்களுக்காகவே இதை நேசிக்கிறோம்" என புலிகளால் கொல்லப்பட்ட பத்மநாபா கூறியிருந்தார்.
11. உடன்பிறந்தவருள் மூத்தவள்.
12. யுத்தத்தால் சிதைந்திருக்கும் வடகிழக்கிற்குச் செய்ய வேண்டியது.
13. அவலட்சணமான.
14. காய்ச்சல்.
15. துறவி.
16. பேரறிஞர். (தலைகீழ்)
18. வள்ளுவன் மழையைப் போற்றி எழுதிய பத் துக் குறள்களும், இதன் சிறப்பு என்று தலைப் பிடப்பட்ட அதிகாரத்தில் உள்ளன.
19. மற்றவர் வாழ்க்கை ஒளிமயமாக தன்னை அழித்துக் கொள்பவன் தியாகி எனில், இது தான் அதற்கு உதாரணம்.
21. வாயிலுள்ளது; சீப்பிலுமுள்ளது.
22. சுழலும் விளையாட்டுச் சாதனம்.
23. யாழ்.வடமராட்சியில் ஓர் ஊர்.
25. பளு. (குழம்பி)
26. க்,ச்,ட்,த்,ப்.
27. இது சிலருக்கு கேட்காது.
28. முற்கால மக்களின் பண்பாட்டை வெளிப்ப டுத்தும் வகையில் ஆய்வுக்குக் கிடைப்பது.

### மேலிருந்து கீழ்

2. விவசாயி.
3. பெரும் அழிவை ஏற்படுத்துவது.
4. மிதவைப் பொருள். கடையெழுத்தில்லாமல்.
5. மோனலிஸா ஓவியத்தின் சிறப்பு. (குழம்பி)
6. இறவாப் புகழுடன் நிலைத்துநிற்கும் தன்மை.
7. உறுதி.
8. விடுகதை அல்லது அறுவடை முடிந்து வீட் டுக்கு கொண்டுவரும் புதுநெல். (தலைகீழ்)
11. கிறிஸ்தவத்தில் கடவுள் நம்பிக்கை இல்லாத வனைச் சொல்வது.
15. விளைச்சல்.
16. ஒற்றை மாட்டு வண்டி. (தலைகீழ்)
17. 1884இல் சிகாகோ தொழிலாளர்கள் எட்டு மணி நேர வேலையை கேட்டு போர்க்கொடி தூக்கிய நாள். (குழம்பி)
19. ங்,ஞ்,ண்,ந்,ம்,ன்.
20. பழம்பாடல்களில் சோலையைக் குறித்து வரும் சொல். (தலைகீழ்)
21. நல்வழி சொல்வார் வீட்டிலே.
23. உமியைக் கழித்தால் அரிசி.
24. முதலெழுத்து இல்லாத அச்சம்.
26. சிலர் வாயைத் திறந்தாலே இதுதான் வரும்.
27. நடக்க உதவலாம்; நாலில் ஒன்றும் ஆகலாம்.

### கு.எ.போட்டி-25 விடைகள்:

| இடமிருந்து வலம்: | மேலிருந்து கீழ்: |
|---|---|
| 1. அலைகள்ஓய்வதில்லை | 1. அங்குலம் |
| 8. குத்தல் | 2. கல்கி |
| 9. குங்கிலியம் | 3. ஓவியம் |
| 12. உறுமு | 4. வகு 5. உத்தி |
| 13. வம்சம் | 6. மாறுதல் |
| 15. கானகம் | 7. முல்லை |
| 18. தரகு | 10. மகாவலி |
| 21. தடிமன் | 11. தசம் |
| 23. பீனிசம் | 14. கம்பீரம் |
| 25. முகம் | 16. கதகளி |
| 26. ரசம் | 17. கடினம் |
| 28. மகா, 29. களிறு | 19. குனி 20. காம்பு |
| 30. கிங்கரன் | 22. சுக்கிரன் |
| 31. திக்கு 32. பாசி | 24. சமன்பாடு |
| 34. குடியரசு | 25. முறுக்கு 27. சங்கு |
| 35. கட்டுரை | 31. ரதி 33. சிரை |

**சரியான விடை எழுதி ரூபா 100 பரிசாகப் பெறும் அதிர்ஷ்டசாலி:**

**ப. கலாராணி,**
**1ம் குறுக்குத் தெரு,**
**வவுனியா.**

**பாராட்டுப் பெறத் தேர்ந்தெடுக்கப் பட்ட எட்டுப் பேர்கள் வருமாறு:**

1. க. குகனேஸ்வரி,
   இராஜவரோதயம் வீதி, திருகோணமலை.
2. இ. செந்தூர்ச் செல்வன்,
   குட்செட் வீதி, தோணிக்கல், வவுனியா.
3. ரஸ்னா திலகராஜா,
   உவர்மலை, திருகோணமலை.
4. சோ. சுஜிகாந்த்,
   பயனியர் வீதி, மட்டக்களப்பு.
5. திவ்யா ராஜேந்திரம்,
   சென்ஜோசப் தமிழ் ம.வி., மஸ்கெலியா.
6. து. கீர்த்திகா,
   7, காத்தார் சி.கு. வீ. திட்டம், வவுனியா.
7. ப. கிருஷ்ணகுமார்,
   சேனைக்குடி, செங்கலடி.
8. சிறீபவன் காயத்ரி,
   ஔவையார் வீதி, திருகோணமலை.

**விடைகளை மட்டும் தனியாக ஒரு தபாலட்டையில் எழுதி எதிர்வரும் 30ந் திகதிக்கு முன் அனுப்பிவையுங்கள்.**

**புதிய கண்ணோட்டம்,**
**த.பெ.இல: 442,**
**கொழும்பு.**

## நாளாந்த வாழ்க்கையை....

(3ம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால் இங்குள்ளவர்களில் பெரும்பாலா னோர் கொழும்பு செல்ல வேண்டியவர்கள்; வவுனியாவில் உறவினர்கள் நண்பர்களிடம் செல்ல விரும்புபவர்கள்; மட்டக்களப்பு, திரு மலைக்குச் செல்ல வேண்டியவர்கள்; அங்கு வதிவிடமுள்ளோர் தொழிலுள்ளோர் இருக்கி றார்கள். இவற்றுக்கப்பால் யாழ்ப்பாணம் செல்ல வேண்டிய கணிசமான தொகையின ரும் இருக்கிறார்கள்.

ஆனால் இந்த முகாமில் இருப்போரின் எதிர்காலம் என்ன என்பது பற்றி மக்களுக் கோ, சிவில் நிர்வாகத்தினருக்கோ, அரசியல் கட்சிகள், தொண்டர் ஸ்தாபனங்களுக்கோ தெரியாது.

அவையெல்லாம், அனுருத்த ரத்வத்தை அடிக்கடி கூறும் இராணுவ விவகாரங்கள் பகிரங்கப்படுத்த முடியாதவை என்பது போல், இந்த மக்களின் எதிர்காலம் பற்றியும் இரகசிய மாக வைக்கப்பட்டிருக்கிறது.

இவ்வருடம் க.பொ.த. உயர்தர பரீட்சை எழுத வேண்டிய மாணவர்கள் கூட இந்த முகாமில் இருக்கிறார்கள். அவர்கள் பரீட்சை எடுக்க ஒழுங்கு மேற்கொள்ளப்படும் என பத்திரிகைகள் தெரிவிக்கின்றன. ஆனால் இதுபற்றி இந்த மாணவர்களுக்கு எதுவுமே தெரியாது. அறிவிக்கப்படவுமில்லை. இந்த லட்சணத்தில் எதிர்காலத்தில் வரக் கூடிய பல்லாயிரக்கணக்கானவர்களை எவ்வாறு பராமரிக்கப் போகிறார்கள்.

தமிழ் மக்கள் எக்கேடு கெட்டால் என்ன, யுத்தத்தில் வெற்றிபெறுவதென்பதே அரசின் குறியாகவும் வெறியாகவும் இருக்கிறது.

தமிழ்ச்சமுதாயம் பேரழிவைச் சந்தித்துக் கொண்டிருக்கையில், சர்வதேச மன்னிப்புச் சபையின், இலங்கை அரசபடைகளின் மனித உரிமை மீறல் பற்றிய அறிக்கைகள் அரசுக்குக் கோபமூட்டுகின்றன. பட்டினி, தடுத்துவைப்பு ஆகியவற்றிற்கு முழுத் தமிழ் சமுதாயமும் விதிவிலக்கல்ல என்றளவிற்கு நிலைமை மோசமடைந்துள்ளது.

தான் எழுத்தில் வடித்துள்ள நடைமுறைக் கில்லாத சட்டங்களையும், மனித உரிமைப் பாதுகாப்புக் குழுக்களையும் உலகுக்குக் காட்டிக்கொண்டு அரசு காலம் தள்ளுகிறது.

உயிர் வாழ்வதற்கான ஆகக் குறைந்த நிபந்தனைகள் கூட அற்றுப் போய்விட்டன. இத்தகைய ஒரு சூழ்நிலையில் பெருமளவு தமிழ் மக்கள் தமிழ் நாட்டிற்கு அகதிகளாகச் செல்வதும் தவிர்க்க முடியாதது.

யுத்தம் மனிதனின் நாளாந்த வாழ்க்கை யை நரகமாக்கிவிட்டது. அபிவிருத்தி, ஏன் வரட்சி நிவாரணம், சமுர்த்திக் கொடுப்ப னவுகளில் கூட அக்கறை காட்டப்படவில்லை. ஏனெனில், அகதிவாழ்க்கைக்கான ஆகக் குறைந்தளவைக் கொடுத்துக் கொண்டு யுத் தத்தை நடத்துவதென்பதே அரசின் உண்மை யான நோக்கமாகும்.

வடக்கின் புனர்வாழ்வு, புனரமைப்பிற் கென சோமபால குணதீர என்பவர் ஜனாதி பதி செயலகத்தினால் நியமிக்கப்பட்டுள்ளார். ஆனால் பெயருக்குக் கூட காரியம் எதுவும் நடைபெறவில்லை.

இத்தகைய ஒரு சூழ்நிலை தொடரும் பட்சத்தில் வடக்கிலிருந்து லட்சக்கணக்கான அகதிகள் தமிழகம் செல்லும் சாத்தியம் நிறையவே உண்டு.

படிப்பகம்

www.padippakam.com





# புலிகளின் மீதான தடை

## விவாதம்



புலிகளின் மீது இந்திய அரசு விதித்திருக்கும் தடையை நீக்க வேண்டும் என்று 'இனி' மாத இதழின் சிறப்பாசிரியர் சுபவீரபாண்டியனும், நீக்கக் கூடாது என்று 'குமுதம்' வார இதழின் பொறுப்பாசிரியர் மாலனும் விவாதிக்கிறார்கள். 'இனி' ஏப்ரல் 96 இதழிலிருந்து நன்றியோடு இங்கு மறு பிரசுரம் செய்கிறோம்.

தமது அதிகாரத்தை ஏற்றுக்கொள்ளாதவர்களைத் துரோகிகளாகக் காட்டுவது என்பது குருசேவ், ஸ்டாலின் காலத்திலிருந்து நடந்து வருகிறது. ஒரு எதேச்சாதிகார அமைப்பில் இது இயல்பானது

இசுலாமியர்கள் ஏன் விரட்டப்பட்டார்கள்? நுஃமானின் எழுத்துக்கள் புலிகளுக்கும், தமிழீழ விடுதலைக்கும் எவ்வளவு எதிரானவை தெரியுமா? தலையில் கறுப்புத் துணி மாட்டிக்கொண்டு புலிகளைக் காட்டிக் கொடுத்தவர்கள் என்பதை மறுக்க முடியுமா?

**சுபவீ :** விடுதலைப்புலிகள் இயக்கம் நான்கு ஆண்டுகளுக்கு முன்பு தடை செய்யப்பட்டது. மே மாதம் 13ம் திகதியோடு தடை முடிகிறது. முதல் இரண்டு ஆண்டுகளிலேயே தடையை நீக்கியிருக்க வேண்டும். அப்போது நீக்கவில்லை. இப்போதாவது தடையை நீக்க வேண்டும் என்பது எங்களது கருத்து. அது குறித்து நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?

**மாலன் :** நீக்குவது சரி என்பதற்கு நீங்கள் நினைக்கிற காரணங்கள் என்ன?

**சுபவீ :** தடை செய்ததற்கே காரணம் இல்லையே. தடை செய்யும்போது சொன்ன காரணம், இந்தியாவைப் பிரிப்பதற்கும், பிரித்து வேறொரு நாட்டோடு இணைப்பதற்கும் புலிகள் மறைமுகமாக வேலைசெய்தார்கள். அப்படிச் செய்வதற்கு இங்கிருக்கும் சில இயக்கங்களுக்கு உதவி செய்தார்கள் என்று சொல்லித்தான் தடை செய்யப்பட்டது. அவர்கள் சொன்ன குற்றத்தை நான்குஆண்டுகள் ஆகியும் மெய்ப்பிக்கவில்லை. எனவே தடையை நீக்க வேண்டும் என்பது மட்டுமல்ல, தடை செய்ததே தவறானது என்பது எங்கள் கருத்து.

**மாலன் :** இந்தியாவில் விடுதலைப்புலிகளுக்குத்தான் தடை இருக்கிறது. ஈழப் பிரச்சாரத்திற்கு தடை இல்லை. சுருக்கமாகச் சொன்னால் இங்கு விடுதலைப் புலிகளுக்குத்தான் தடையே தவிர, விடுதலைக் குயில்களுக்குக் கிடையாது. தமிழை ஆட்சிமொழியாக ஏற்றுக்கொண்ட மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளில் ஈழப் பிரச்சாரமே செய்ய இயலாது. இங்கிலாந்தில் அக்டோபர் மாதத்தில் இருந்து அகதிகளை ஏற்க மாட்டோம் என்று அரசு ரீதியாக முடிவெடுத்துள்ளனர். ஜேர்மனியில் ஜேர்மானியர்களின் ஒரு பிரிவினர் ஈழத் தமிழர்கள் மீது தாக்குதலே நடத்துகின்றனர். ஆனால் இந்தியாவில் புலிகள்மீதுதான் தடை விதிக்கப்பட்டுள்ளது.

அதற்குக் காரணம் அவர்களது செயல்பாட்டு முறை. அடிப்படையில் புலிகள்இயக்கம் ஒரு அரசியல் இயக்கமல்ல, இராணுவ அமைப்பு. எனவே வேறொரு நாட்டில் தளத்தை வைத்துக்கொண்டு செயல்படும் ஒரு இராணுவ அமைப்பை ஒரு அரசு எப்படி எதிர்கொள்ளுமோ, அப்படித்தான் எதிர்கொண்டுள்ளது. எனவே இந்தியா சரியான முறையில் தான் நடந்துகொண்டுள்ளது. மேலும் மத்திய அரசு தனியாக இதைச் செய்யவில்லை. தமிழக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசின் பரிந்துரையோடுதான் செய்திருக்கிறது.

**சுபவீ :** மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளில் புலிகளுக்குத் தடை இருக்கிறது என்று சொல்கிறீர்கள். உலகில் 54 நாடுகளில் புலிகளுக்கு கிளைகள் இருக்கின்றன. உலகநாடுகளில் புலிகள் இயக்கம் செயல்பட ஈழத்தமிழர் மட்டுமல்ல, வெவ்வேறு தேசத்து மக்களும் ஆதரவாக இருக்கின்றனர். அயர்லாந்து பாராளுமன்றத்தில் இரண்டுமுறை புலிகளுக்குத் தடை கோரும் தீர்மானம் தோற்கடிக்கப்பட்டுள்ளது. கடந்த பிப்ரவரியில் இலங்கையில் நடந்த ஒரு பத்திரிகையாளர் மாநாட்டில், இலங்கை அமைச்சர் ஜீ.எல்.பீரிசிடம், எல்லா நாடுகளிலும் புலிகளைத் தடைசெய்யக் கோருகிறீர்களே ஏன் இங்கு தடைசெய்யவில்லை என்று கேட்டதற்கு, எங்களால் தடை செய்ய முடியாது என்று பதிலளித்திருக்கிறார். அதற்கு அடுத்த நாள் சந்திரிகா, உலக நாடுகளெல்லாம் தடைசெய்ய வேண்டும் என்று பேசியுள்ளார். இவர்கள் வேண்டுகோளை ஏற்று எந்த நாடும் இதுவரை தடைசெய்யவில்லை.

**மாலன் :** இங்கும் இராணுவ அமைப்புக்குத்தான் தடை தவிர, ஈழவிடுதலை என்ற அரசியலை தடை செய்யவில்லை.

**சுபவீ :** ஈழ விடுதலையை இந்தியா எப்படி தடை செய்யமுடியும்.

**மாலன் :** இந்தியாவில், அதற்கான பிரச்சாரத்தையோ அல்லது பத்திரிகைகளையோ தடை செய்யவில்லை. குறைந்தபட்சம் சென்சார் கூட செய்யவில்லை.

**சுபவீ :** தமிழீழ விடுதலையையும் விடுதலைப் புலிகளையும் பிரித்துப் பார்க்க முடியாது என்பதுதான் உண்மை.

**மாலன் :** விடுதலைப் புலிகள் மட்டும்தான் ஈழ விடுதலைப் போராட்டம் என்பது இங்கு செயற்கையாக உருவாக்கப்பட்ட ஒரு கருதுகோள். இது உண்மையல்ல. மற்ற குழுக்கள் புலிகளின் வழிமுறைகளை ஏற்றுக்கொள்ளவில்லையே தவிர ஈழவிடுதலை என்ற இலட்சியத்தை ஏற்றுக்கொண்டவர்கள்தான். இன்னும் சொல்லப்போனால் இந்தியா அந்த இலட்சியத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. இந்தியா ஒன்றுபட்ட இலங்கைக்குள் ஒரு தீர்வு ஏற்பட வேண்டுமென கருதுகிறது. இந்தியாவின் நிலை இலங்கையைத் துண்டாடுவது என்பதல்ல. யாழ் தமிழர்களுக்கு சம உரிமை பெற்றுக் கொடுப்பதுதான். இப்படி ஈழ விடுதலை என்ற நிலை எடுக்காத இந்தியா, ஈழ விடுதலை என்ற நிலையை எடுத்துக்கொண்ட மற்ற இயக்கங்களைத் தடை செய்யவில்லை.

**சுபவீ :** அதாவது புலிகள் இராணுவஅமைப்பு, ஈ.பி.ஆர்.எல்.எப்-பும், ஈ.என்.டி.எல்.எப்-பும் இராணுவ அமைப்பில்லாமல் அரசியல் அமைப்பா?

**மாலன் :** அரசியல் அமைப்புதான் அது.

**சுபவீ :** ஏன் அவர்களுக்கு இராணுவமோ, துப்பாக்கியோ என்ன என்றே தெரியாதா? யாராவது நம்புவார்களா?

**மாலன் :** இல்லை. இல்லை. இராணுவ செயல்பாடு என்பது அதனுடைய ஒரு பகுதியாகவே இருந்தது. அதுவே அவர்களது முழுப்பணியாக இல்லை. அவர்கள் தேர்தலுக்கு முன்வந்தார்கள். அவர்கள் மக்களைச் சந்தித்து ஓட்டுக் கேட்கும் முறையில் நம்பிக்கை வைத்தார்கள். அவர்கள் பாராளுமன்ற ஜனநாயகத்தில் நம்பிக்கை வைத்து, பாராளுமன்றத்தில் பங்குபெறுகிறார்கள்.

**சுபவீ :** புலிகளுக்கு அரசியல் பிரிவு இல்லையென்று யார் சொன்னது? அதாவது தேர்தலில் நிற்பதுதான் அரசியல் என்று ஒரு முடிவுக்கு வந்து விட்டீர்களா?

**மாலன் :** அப்படியில்லை. புலிகளுடைய அரசியல் சித்தாந்தமென்ன?

**சுபவீ :** 'தமிழீழம் எங்கள் தாகம்' என்பது சித்தாந்தம் இல்லாமல் வேறு என்ன?

**மாலன் :** பாண்டிபசாரில் நடந்த துப்பாக்கிச் சூடு அரசியல் காரணங்களுக்காகவா?

**சுபவீ :** அவர்களுடைய அமைப்பில் எடுத்த தீர்மானங்களின்படி நடந்து கொள்ளத் தவறிய விவகாரம் முற்றி இரண்டுபேரும் சுட்டுக்கிட்டிருக்கலாம். ஆனால் அதற்காகவா புலிகளைத் தடை செய்தார்கள்?

**மாலன் :** அப்படிஅல்ல. அவர்களது தோற்றமும் வளர்ச்சியும் அதுதான்.

ஒரு அரசியல் விஷயத்தினால் உந்தப்பட்டு, நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ், 'இந்தியன் நேஷனல் ஆர்மி' கட்டின மாதிரி செயல்படல. சுபாஷ் சந்திரபோஸ் அதனை ஓர் 'ஆர்மி' என்றே 'டிக்ளேர்' பண்ணி நடத்தினார். அதனை அவர் அரசியல்இயக்கம் என்று சொல்லி நடத்தவில்லை. அதற்காக அவருக்கு அரசியல்நோக்கம் கிடையாது என்று நான் சொல்ல முடியாது. அரசியல் நோக்கமும் இருந்தது. ஆனால் அது ஒரு அரசியல் கட்சியாய் இல்லை. ஒரு இராணுவ இயக்கம்.

அதைப் போன்றதுதான் புலிகள் இயக்கமும். அவர்களுடைய நோக்கம் தமது நாட்டினுடைய விடுதலை. அதற்காக அவர்கள் அரசியல் இயக்கம் நடத்துகிறார்களா என்றால் இல்லை. அவர்கள் இயக்கம் இராணுவ இயக்கம்தான்.

**சுபவீ :** ஒரு விடுதலைப் போராட்ட இயக்கம், விடுதலை பெறுகிறவரைக்கும், ஒரு அரசியல் தீர்வைக் கொண்ட இராணுவ இயக்கமாகத் தானே இருக்க முடியும்? பிடல் காஸ்ட்ரோ, சேகுவேராவை வைத்துக் கொண்டு ஒரு கெரில்லா யுத்தம் நடத்தும் போது, அது ஒரு அரசியல் கட்சி அல்ல. இராணுவ இயக்கம்தான். ஆனால் அது இன்றைக்கு ஒரு பெரிய அரசியல் கட்சியாக பரிணமித்திருக்கிறதா இல்லையா?

**மாலன் :** இன்றைக்கு இருக்கும் நடையைப் பற்றித்தான் நாம் பேசுகிறோம். ஒரு இராணுவத் தலைமை ஒரு இராணுவ செயல்பாட்டு முறை, ஒரு இராணுவ ரீதியிலான நிர்வாகம்.

**சுபவீ :** யாசர் அரபாத் அமைப்பில் இராணுவ ரீதியான செயல் இல்லாமல் வேறு என்ன அமைப்பு இருக்கிறது.

**மாலன் :** யாசர் அரபாத்தைக் கண்டு இந்தியா பயப்பட வேண்டிய சூழ்நிலை இல்லை. யாசர் அரபாத் இந்தியாவின் தலைமையை ஏற்றுக்கொண்டவராக இருந்தார். அதைக் கண்டு நாம் மிரட்சிஅடையவேண்டிய தேவை இல்லாமல் இருந்தது. ஆனால் விடுதலைப் புலிகளைக் கண்டு அஞ்சிய இந்தியா தனது பாதுகாப்பைக் கருதி தன்னை வலுப்படுத்திக் கொள்வதில் தவறில்லையே.

**சுபவீ :** எப்போது ஈழத் தமிழர்கள் நம்மை பகைவனாகக் கருதினார்கள். இந்திராகாந்தி காலத்தில் கருதினார்களா? பகைஉணர்விற்கு யார் காரணம்? இந்திராவின் காலத்தில் புலிகள் ஒருபோதும் இந்தியாவைப் பகைவர்களாகக் கருதியதில்லை. ராஜீவ்காந்திதான் காரணம் என்று சொல்லுங்கள். தடை செய்யப்பட வேண்டியது ராஜீவ் காந்தியின் படமும் அவரது சிந்தனைகளுமே தவிர....

**மாலன் :** படத்தை வைத்துக் கொள்வதும் வைத்துக் கொள்ளாததும் அவரவருடைய விருப்பம்.

**சுபவீ :** இல்லை. இந்த தேசத்தை ஒரு சிக்கலில் கொண்டு போய்விட்டதே ராஜீவ்காந்திதான் என்பதை நீங்கள் ஒத்துக் கொள்கிறீர்களா? தேவைப்படாத ஒன்றில் தலையிட்டு ஜெயவர்த்தனாவின் ராஜதந்திரத்திற்கு உள்ளாகி....

**மாலன் :** தேவை இல்லாதது என்று எப்படிச் சொல்ல முடியும்?

**சுபவீ :** சேற்றுக்குள்ளே போய் யானை மாட்டிக்கிட்டமாதிரி இங்கேயிருந்து அமைதிப் படையை அனுப்பி ஒரு பயனும் இல்லாம...

**மாலன் :** ஒரு பிரயோசனமும் இல்லாம என்று எப்படி சொல்றீங்க? அமைதிப்படையை அனுப்புவதற்கு முன்னால பல சம்பவங்கள் நடந்திருக்கு நான் ஆரம்பத்திலேய சொன்னதுபோல்....

**சுபவீ :** நடந்தது. திம்புப் பேச்சுவார்த்தையிலேயே புலிகள் இல்லாமல் பேச்சுவார்த்தை நடத்தி பயனில்லை என்று தெரிந்தது. முதலில் ஜி.பார்த்தசாரதி இங்கே தூதராக இருந்தார். ஜெயவர்த்தனா வந்தவுடனே ஜி. பார்த்தசாரதியை மாற்ற வேண்டும் என்று அறிக்கை விடுகிறார். ராஜீவ் காந்தியும் மாற்றிவிட்டு ரமேஷ் பண்டாரியைப் போடுகிறார். இந்தியாவின் பிரதமர் ராஜீவ் காந்தியா? ஜெயவர்த்தனேவா? ஜெயவர்த்தனே சொன்னபடி எல்லாம் ராஜீவ்காந்தி ஆடினார்.

**மாலன் :** அப்படி எல்லாம் ஒன்றும் சொல்ல முடியாது. நீங்கள் ரொம்ப 'சிம்ப்ளிபை' பண்ணி சொல்றீங்க. அப்போதிருந்த தேவைகளென்ன? அப்போது இங்கே எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் சரியா? தவறா? என்கிற வரலாற்றை வைத்துத்தான் பார்க்க வேண்டுமே தவிர, இன்றைக்குப் பல நிலைமைகள் மாறிவிட்டதற்குப் பிறகு நீங்கள் அதைப்பற்றிப் பேச முடியாது. நீங்கள் சொன்னதுபோல், இந்த பகை உணர்வு ஏற்பட ராஜீவ்காந்தியே காரணமாக இருக்கட்டும். அப்படியே இருந்தாலும் இந்தியா தன்னைத் தற்காத்துக்கொள்வதில் என்ன தவறு? பகை உணர்வு ஏற்பட்டுவிட்டது என்பதுதான்உண்மை. அதற்கு யார் காரணம் என்ற சந்தேகத்திற்கோ, ஆராய்ச்சிக்கோ இங்கு வரவில்லை. இப்போது இருக்கக் கூடிய நிஜமான சூழ்நிலை, இந்தியாவுக்கும் புலிகளுக்கும் பகை உணர்வு இருக்கு.

**சுபவீ :** தமிழீழ மக்களுக்கு இந்தியாவின் மீது பகை உணர்வு இல்லையா?

**மாலன் :** தமிழீழ மக்களுக்கும், இந்திய மக்களுக்கும் பகை உணர்வு இல்லை.

**சுபவீ :** அப்படி தமிழீழ மக்களின் மீது உங்களுக்குப் பகை உணர்வே இல்லையெனில், உங்களுடைய விமானியை எதற்கு அங்கே அனுப்பினீர்கள். புலிகள் சுட்டு வீழ்த்திய ஒரு விமானத்தில் இருந்து கரையில் ஒதுங்கிய ஒரு இராணுவ வீரனின் பெயர் சதீஷ்குமார். இந்தியன். இந்தியா தமிழீழ மக்களுக்கு எதிரானது இல்லையென்று சொன்னால், தமிழ் மக்கள் மீது குண்டுபோட்ட இரண்டு விமானிகளில் ஒருவர் விக்கிரமசிங்கே, இன்னொருவர் சதீஷ்குமார். இது தமிழீழ மக்களின் மீதான நடவடிக்கையா? இல்லையா?

**மாலன் :** இந்தச் செய்தியை நான் படிக்கவில்லை.

**சுபவீ :** டிசம்பர் மாதம் 5ம் நாள் கோவைப் பதிப்பு தினத்தந்தியில் வெளிவந்த செய்தி இது.

**மாலன் :** இந்தியா அனுப்பியது என்று எப்படிச் சொல்லமுடியும்?

**சுபவீ :** இந்தியாதான் செய்கிறது. சதீஷ்குமாரின் செய்தி கோவைப்பதிப்பு தினத்தந்தியில் வந்தது. உடனடியாக அது மறைக்கப்பட்டு மற்ற பத்திரிகைகளில் வராமல் பார்த்துக் கொள்ளப்பட்டது. பத்திரிகைகள் குறிப்பாக, பார்ப்பனீயப் பத்திரிகைகள் திட்டமிட்டு எந்தத் தவறு நடந்தாலும் அதற்குப் புலிகளே காரணம் என்று எழுதி வருகின்றன. உதாரணமாக வேலூர் கோட்டையில் இருந்து புலிகள் தப்பித்த அடுத்த நாள், ஆம்பூரில் நடந்த வங்கிக் கொள்ளையை புலிகள்தான் செய்தார்கள் என்று எழுதின. அதற்கு அடுத்தநாள் அந்த வங்கி ஊழியர்களே அந்த வங்கிக் கொள்ளையை செய்தார்கள் என்ற செய்திக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை. இப்படித் திட்டமிட்டு புலிகளின் மீது தவறான பிரச்சாரம் செய்யப்படுகிறது. புலிகள் மீது ஒடுக்குமுறை என்ற பெயரில் தமிழீழ மக்களுக்கு எதிராகவும், இங்குள்ள தமிழ்த் தேசிய மக்களுடைய உரிமைக்கு எதிராகவும்தான் இந்திய அரசாங்கம் நடந்துகொள்கிறது. அதற்குத்தான் இந்தத் தடை பயன்படுகிறது.

**மாலன் :** அப்படியானால் மற்ற இயக்கங்களைத் தடை செய்திருக்கணுமே, உங்க பிரச்சாரத்தைத் தடை செய்திருக்கணுமே.

**சுபவீ :** தடாவில் இருப்பதெல்லாம் தமிழின உணர்வாளர்கள் தானே?

**மாலன் :** நீங்கள் ஈழப்போராட்டத்திற்கு ஆதரவான பிரச்சாரம் மட்டும் செய்திருந்தால் பிரச்சினைகள் இருக்காது.

**சுபவீ :** புலிகளைஆதரிக்கும் உரிமை எனக்கு ஏன் இல்லை? நான்கு நாட்களுக்கு முன் சவாண் பேச்சுவார்த்தை நடத்துகிறார். யாரோடு? அவர் சொன்னதை நான் அப்படியே சொல்கிறேன். எந்த நிபந்தனையும் இல்லாமல் பாகிஸ்தானோடு காஷ்மீரைச் சேர்க்க வேண்டும் என்று சொல்லுகிற தீவிரவாதிகளோடு கூட நாங்கள் பேச்சுவார்த்தை நடத்தத் தயார் என்று சொல்லியிருக்கிறார். இந்தியாவை பிரித்து பாகிஸ்தானோடு சேர்க்க வேண்டும் என்று சொல்லுவபர்களிடம் கூட நீங்கள் பேச்சு நடத்துவீர்கள். ஆனால் தமிழ் நாட்டைப் பிரித்து வேறு எங்கும் சேர்க்க வேண்டும் என்று புலிகள் ஒருநாளும் சொன்னதில்லை. அப்படிச் சொல்லாத ஒரு குற்றச் சாட்டைக் கூறி புலிகளைத் தடை செய்தது என்ன நியாயம்?

**மாலன் :** இங்கு இருக்கக்கூடிய சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு மாநில அரசின் ஒப்புதலோடுதான் தடைசெய்தார்கள்.

**சுபவீ :** மாநில அரசுக்கு நீங்கள் எவ்வளவு அதிகாரங்கள் கொடுத்திருக்கிறீர்கள் என்பது தெரியுமே. ☞

படிப்பகம்

www.padippakam.com



**மாலன் :** மாநில அரசென்பது 'பியூர்லி எலெக்டட் கவர்மெண்ட்'.

**சுபவீ :** 'ப்யூர்லி எலெக்டட் கவர்மெண்டு'க்கு எவ்வளவு அதிகாரம்? 4 கோடி மக்கள் ஓட்டை, ஒரே ஒரு கையெழுத்தில் கலைப்பது தானே?

**மாலன் :** போதுமான அதிகாரங்கள் இல்லையென்று மாநில அரசு சொல்லவில்லை.

**சுபவீ :** இந்த அரசெல்லாம் அப்படி உண்மையைச் சொல்லியிருந்தால் உருப்பட்டிருப்போமே! எந்த அரசும் ஆட்சியில் இருக்கும் வரை சொல்லாது.

**மாலன் :** இந்திய அளவில் உள்ள அரசியல் கட்சிகள், தமிழகத்திலுள்ள அரசியல் கட்சிகள் எல்லாம் ஈழப்பிரச்சினையை அவர்களுடைய அரசியல் நோக்கங்களுக்காகப் பயன்படுத்திக் கொண்டார்கள்.

**சுபவீ :** ஒன்று, பத்திரிகைகளால் இப்படி ஒரு நிலை ஏற்பட்டது. இன்னொன்று அரசியல்வாதிகளால் ஏற்பட்டது. அரசியல்வாதிகள் தங்களுடைய அரசியலுக்காக ஈழப்பிரச்சினையை பயன்படுத்திக் கொண்டார்கள் என்பதை பிரபாகரனே சொல்லியிருக்கிறார். இங்குள்ள அரசியல் கட்சிகளுக்கு நான் பரிந்து பேசவில்லை. இவர்கள் சந்தர்ப்பவாதிகள் என்பது தெரியும். மாநில அரசு தடை நீட்டிப்புத் தீர்மானம் கொண்டு வந்தபோது திமுக, மதிமுக ஒற்றை உறுப்பினர்கள் நடுநிலை வகித்த கொடுமையை நான் மறுக்கவில்லை. இக்கட்சிகளின் நிலை, கூடுதலான ஒரு காரணம் என்பது உண்மை. இந்த இரண்டு காரணங்களால் ஒரு தொய்வு ஏற்பட்டது என்று நான் சொன்னேன். ஆனால், தொய்வு ஏற்பட்டதிலிருந்து ஒரு எழுச்சி வருகிறது என்று சொன்னேனே தவிர, 83 அளவுக்கு எழுச்சி என்று சொல்லவில்லை. 91-92 இல் இருந்த நிலைமை மாறி இப்போது புலிகளுக்கான ஆதரவு பெருகிவருகிறது. இது 83ஐக் காட்டிலும் கூடுதலாகவும் வரக்கூடும்.

**மாலன் :** நான் அவர்களைத் தமிழர்களாகப் பார்க்கவில்லை. மனிதர்களாகப் பார்க்கிறேன். எந்த மனித உரிமைக்காகப் போராடுவதாய்ச் சொல்கிறார்களோ, அந்த மனித உரிமைகளை மறுப்பவர்களாக இருக்கிறார்கள். புலிகள் வெளியேற்றியவர்களில் நுஃமான் போன்ற அறிஞர்களும் இருந்தார்கள். செல்வி என்ற பெண் கவிஞரைச் சிறைவைத்தார்கள். இவர்கள் ஒரு தனி நபரின் ஆதிக்கத்திற்காகத் தமிழ் மக்களை பலியிடுகிறவர்கள். யாழ்ப்பாணத்தைவிட்டு வெளியேற மறுத்ததற்காக ஒரு கல்லூரி முதல்வர் சுட்டுக்கொல்லப்பட்டார் என்று இந்து பத்திரிகையில் செய்தி வெளிவந்தது. வெளியேறிய எல்லோரும் புலிகளை முழு மனதாக ஏற்றுக்கொண்டார்கள் என்று சொல்லமுடியாது.

**சுபவீ :** நீங்கள் ஒரு பத்திரிகையினுடைய ஆசிரியர். நீங்கள் ஈழம் போய்ப் பார்த்துவிட்டு வந்துவிட முடியுமா? இலங்கை அரசு அனுமதிக்குமா?

**மாலன் :** இரண்டு தரப்புகளிலும் தணிக்கை இருக்கிறது.

**சுபவீ :** இரண்டும் ஒரே மாதிரியானதுதானா? ஒரு போராளிக்குழு தணிக்கை வைத்திருப்பதும், ஒரு அரசு தணிக்கை வைத்திருப்பதும் ஒன்றாகுமா? இஸ்லாமியர்களைப் பற்றி அன்டன் பாலசிங்கம் கூறுகையில், சிலஇடங்களில் கூடுதலாகச் சில செய்திகள் நடந்திருக்கின்றன என்று வருத்தப்பட்டுக் கூறுகிறார். இஸ்லாமியர்கள் ஏன் விரட்டப்பட்டார்கள்? நுஃமானின் எழுத்துக்கள் புலிகளுக்கும், தமிழீழ விடுதலைக்கும் எவ்வளவு எதிரானவை தெரியுமா?

**மாலன் :** விடுதலைதான் அவர்கள் கோரிக்கையும்.

**சுபவீ :** தலையில் கறுப்புத்துணி மாட்டிக் கொண்டு புலிகளைக் காட்டிக்கொடுத்தவர்கள் இல்லையா? இதை மறுக்க முடியுமா?

**மாலன் :** தமது அதிகாரத்தை ஏற்றுக்கொள்ளாதவர்களைத் துரோகிகளாகக் காட்டுவது என்பது குருசேவ், ஸ்டாலின் காலத்திலிருந்து நடந்து வருகிறது. ஒரு எதேச்சதிகார அமைப்பில் இது இயல்பானது.

**சுபவீ :** எந்த எதேச்சதிகார அமைப்பைக் காட்டிலும் கூடுதலான எதேச்சதிகார அமைப்பு இந்தியாவினுடையது....

**மாலன் :** இந்திய அரசின் அறிவிக்கப்பட்ட, அறிவிக்கபடாத கொள்கைகளுக்கெதிரான கருத்துக்களுக்கும் இன்றைக்கும் இந்தியாவில் இடமுண்டு. அப்படி இருப்பதால் தான் நாம் ரெண்டு பேரும் பேசிக்கொண்டிருக்கிறோம். அப்படி இடமில்லையெனில் நாம் இருக்கும் இடம் வேறாக இருக்கும். இதைப்போன்ற ஒரு கருத்து சுதந்திரம் யாழ்ப்பாணத்தில் கிடையாது.

**சுபவீ :** இந்தியாவில் ஒரு கருத்து சுதந்திரம் இருக்கிறது என்பதே எனக்கு மிகவும் விநோதமாக இருக்கிறது. சரி யாழ்ப்பாணம் இன்று இராணுவத்திடம்தானே இருக்கிறது. இராணுவம் கருத்து சுதந்திரத்தை அனுமதிக்க வேண்டியதுதானே. நிருபர்களைக் கூட்டிப்போய்க் காட்ட வேண்டியதுதானே, அவர்கள் வீடுகளையெல்லாம் இடித்துத் தள்ளியிருக்கும் கொடுமைகளை....

**மாலன் :** இராணுவத்தை நான் ஜனநாயகத்தின் காவலர்கள் என்று ஒருபோதும் சொல்லவில்லை. எந்த இராணுவமும் ஜனநாயகத்தின் காவலர்களாக இருக்க முடியாது. மக்கள் நீக்க வேண்டும் என்று சொன்னால் இந்த தடை நியாயமற்றது. நீக்க வேண்டாம் என்று சொன்னால் தடை நியாயமானது.

**சுபவீ :** மக்களைக் கேட்டா இந்த அரசு தடை விதித்தது?

**மாலன் :** இப்ப மக்களைக் கேட்கட்டுமே, அதற்கொரு வாய்ப்பு வருகிறதல்லவா?

**சுபவீ :** ஒவ்வொன்றுக்கும் மக்களை கேட்க முடியுமா? கட்சிகள் தோற்பதற்கும், வெற்றி பெறுவதற்கும் பல்வேறு காரணங்கள் உள்ளன. நீங்கள் சொல்லும்படியானால் மக்கள் கருத்து கணிப்பு இந்த அரசு வைக்க வேண்டும். ●

# தலித் இலக்கியம்



தலித் என்பவர் யார்? என்ற கேள்விக்கு கெய்லி ஓம்வெத் கூறும் பதில்: தாழ்த்தப்பட்டவர்கள், மலைவாழ் மக்கள், புதிய பௌத்தர்கள், உழைக்கும் மக்கள், நிலமற்றவர்கள், ஏழை விவசாயிகள், பெண்கள், அரசியல் ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் மதத்தின் பெயராலும் சுரண்டப்படும் அனைவருமே தலித்துக்கள்தான் என்பார். மேற்கூறிய விளக்கம் ஒரு பரந்துபட்ட எல்லையில் ஒரு அரசியல் ரீதியான அணிதிரட்டலில் கூறப்பட்டாலும் தலித்துகள் என்போரைத் தீண்டத்தகாதவர்கள் அல்லது அரிசனங்கள் என்று வரையறுத்துவிடலாம்.

ஒருகாலத்தில் பேச்சு மொழியை அப்படியே கொச்சையாக இலக்கியத்தில் பயன்படுத்துவதற்கு கடும் எதிர்ப்பு இருந்தது. 'இழிசனர் வழக்கு' என்றெல்லாம் அது இடித்துரைக்கப்பட்டது. இன்று தலித் இலக்கியம் என்பதே இலக்கியத்தின் ஒரு சிறப்பான பகுதியாக அங்கீகரிக்கப்பட்டுவிட்டது. இலக்கியத்திற்குச் சம்பந்தமில்லாத விஷயமே இந்தப் பிரபஞ்சத்தில் இல்லை என்றாகிவிட்டது.

தமிழில் தலித் இலக்கிய முன்னோடியாக கே.டானியல் குறிப்பிடப்படுகிறார். சிவகாமியின் பழையன கழிதலும்..., ஆனந்தாயி, இமையத்தின் கோவேறு கழுதைகள், பாமாவின் கருக்கு, சங்கதி போன்ற நாவல்களும், பழமலையின் சனங்களின் கதை, கரிகாலனின் அப்போதிருந்த இடைவெளியில் போன்ற கவிதை நூல்களும் தலித்தியப் படைப்புகளாகச் சுட்டப்படுகின்றன.

தலித்தியம் என்றால் என்ன என்பது பற்றி டாக்டர் ராஜ் கௌதமனின் நூல், கன்னடக் கவிஞர் சித்தலிங்கய்யாவின் தமிழில் வந்த பேட்டிக் கட்டுரைகள் மற்றும் விழி.பா.இதயவேந்தன், டாக்டர் கே.குணசேகரன், ரவிக்குமார், சோ.தர்மன், பிரதிபா ஜெயச்சந்திரன், தேவிபாரதி போன்றோரின் கதைகள் கட்டுரைகள் கவிதைகளும் தலித் இலக்கியப் படைப்புகளாகச் சுட்டிக்காட்டப்படுகின்றன.

கோடாங்கி என்ற பெயரில் தலித் இலக்கியக் காலாண்டிதழ் ஒன்று சென்னையிலிருந்து வருகிறது. எல்லா சிற்றிதழ்களும் தலித் இலக்கியம் பற்றி சிறப்புக் கட்டுரைகள் வெளியிடுகின்றன. ஏனைய மொழிகளிலும் வந்த தலித் இலக்கியப் படைப்புகளைத் திரட்டி பிணத்தை எரித்தே வெளிச்சம் என்ற பெயரில் தொகுப்பு நூலொன்றை இந்திரன் தந்துள்ளார்.

இன்றைய தலித்-படைப்புகளைப் படிக்கிறபோது புதுமைப்பித்தன் சொன்னதும் தான் ஞாபகத்தில் வரும். 'நாசூக்காக முகத்தைத் திருப்பிக் கொண்டு செல்ல வேண்டாம். இப்படித்தானய்யா இருக்கிறது உலகம்!' அடக்கப்பட்டுக் கிடந்தவர்கள் தங்களை வெளிப்படுத்திக் கொள்ளும்போது அந்த வெடிப்பில் எழுகிற உத்வேக எழுத்துக்கள் இன்றைய தளுக்கு நாகரீகத்தின் முகங்களில் வந்து அறைவதைத் தடுக்க முடியாது.

பாமாவின் 'சங்கதி' நாவலிலிருந்து ஒரு பகுதி இது:

...."இது மட்டுமில்ல, அங்க தீப்பெட்டி ஆபிசுல மேஸ்திரி அண்ணாச்சிட்ட அடி வாங்குனேன். பெறகு இப்ப எங்கய்யங்கிட்ட அடி வாங்குனேன்" சொல்லும்போதே அவா கண்ணுலருந்து பொங்கிக்கிட்டு வந்த தண்ணிய பாவாடயத் தூக்கித் தொடச்சுக்கிட்டா. எனக்கும் மனசுக்குச் சங்கடமா இருந்துச்சு.

"மேஸ்திரி எதுக்குத்தா அடுச்சான்?"

"மேஸ்திரி இன்னைக்கு ரெண்டு தடவ அடுச்சுப் போட்டான் பெரீம. மொதத் தடவ தீப்பெட்டி ஒட்டயில பசய நெறய்யா தடவி, ரெண்டு தாள ஒட்ட முடியாம தூக்கிப் போடுரதப் பாத்துட்டு வந்து நறுக்குன்னு தலைல கொட்டுனான். தலையே விண்ணுன்னு தெருச்சுப் போச்சு. அம்மாந்தட்டி ஆளு கொட்டுனா நாஞ் சின்னப்பிள்ள பொறுக்க முடியுமா? சொல்லுங்க" கேட்டுக்கிட்டே தலையத் தடவுனா.

எனக்கு அவளப் பாக்கைல ரொம்ப கஸ்டமா இருந்துச்சு. அது பாட்ல கன்னுக்குட்டி கெணக்கா ஓடியாடி வெளாண்டுட்டு கெடக்க வேண்டிய வயசுல, இப்பிடிக்கெடந்து அவஸ்தப்படுதேன்னு பாவமா இருந்துச்சு.

"பெறகு எதுக்கு திரும்பியும் அடுச்சான்?"

"திலும்பியா? எனக்கு எடைல வெளிக்கு முடுத்துக் கெடந்துச்சா. நாம் பாட்டுக்கு நம்மூருல போற மாதிரி போயி வெளிய ஒரு மரத்தடில இருந்துட்டு கல்லுட்ட தொடச்சுப் போட்டுட்டு வந்தேன். இத எவளோ சொல்லிக் குடுத்துருக்கா. இப்பிடி வெளிய பேண்டதுக்குக் கூட அடிக்காக..."

கொஞ்ச நேரம் பேசாம இருந்தா. அவளையும் மீறி கண்ணீரு ஊத்துது. தொடச்சுக்கிட்டே சொன்னா, "நானு கோழி கூப்ட எந்துருச்சு ஓடுமுன்ன வெளிக்கெல்லாம் போக டயமில்ல பெரீமா. இம்புட்டு நாளா வெளிக்கு வந்ததில்லை. அப்பிடியே வந்தாலும் செலநேரம் அடக்கி வச்சுட்டு இங்க




வந்து நம்ம கொல்லா மந்தைல தான இருப்பேன். இன்னைக்கு அடக்கவே முடில. அதான் போயிட்டேன்." இப்பிடிச் சோகமாச் சொல்லிக்கிட்டு வந்தவா திடீர்னு மொகத்துல ஒரு சிரிப்போட சத்தமா, "பெரீமா, ஓங்களுக்கு ஒரு வெசயந் தெரியுமா?" கேட்டுக்கிட்டு வெசயம் என்னன்னு சொல்லாமலே சிரிப்புன்னாச் சிரிப்பு அப்பிடி ஒரு சிரிப்பு சிரிக்கா.

எனக்கு வெசயந் தெரியாமலே அவா சிரிக்குர சிரிப்பப் பாத்துட்டு எனக்கும் சிரிப்பு அள்ளுது.

இம்புட்டு நேரமும் நாங்க பேசுத கேட்டுக்கிட்டுருந்த எங்கம்ம, "ஏ பெயமகளே சொல்லிட்டுச் சிரி. அங்க பாரு...." சொல்லிட்டு எங்கம்மாயுஞ் சிரிக்கா.

பெறகு சிருச்சுக்கிட்டே ரகசியமா ஏங்கிட்டத்துல வந்து, "பெரீமா, தீப்பெட்டி ஆபிசுல பீரும்புன்னு தனியா கெட்டி வச்சிருக்காக. அதுல தான் போயி ஒன்னுக்கு ரெண்டுக்கு இருக்கனுமாம்." சொல்லிட்டு திரும்பியும் சத்தம் போட்டு கெக்கரிச்சுக்கிட்டு சிரிக்கா.

இதக் கேட்டுட்டு நாங்க எல்லாருங் கெடந்து உழுந்து உழுந்து சிருச்சோம்.

ஒருகாலத்தில் ஈழத்துக் கதைகளுக்கு அதில் வரும் சொற்களுக்கு அடிக்குறிப்பு தேவை என்று தமிழ் நாட்டில் சொல்லிக் கொண்டிருந்தார்கள். இப்போது நமது முறை. இதோ சில அரும்பதங்களுக்கு விளக்கம். பெரீம - பெரியம்மா, அம்மாந்தட்டி - அவ்வளவு பெரிய, வெளாண்டுட்டு - விளையாடிக்கொண்டு, எடைல - இடையில், பீரும்பு - கக்கூஸ் அறை.



இறக்கைகள் ஒடுக்கி
கால்கள் கட்டி
கண்கள் மூடி
காத்திருக்கும் கோழி,
மதியம்
குழம்பில் கொதிக்க.

கைப்பிடி அரிசியள்ளி
அருகில் வைப்பேன்
நான்
போகும் வழிக்குப் பண்ணியம் தேட.

– ஜி. சிவக்குமார்

படிப்பகம்

www.padippakam.com



# யுத்தமுனைப்பு பிரதானப்படுத்தப்பட்டுவிட்ட நிலையில் தமிழ் மக்கள் மத்தியில் இருக்கும் பயங்கரவாதம் ஒழிக்கப்படக்கூடியதுதானா?

ரி. சிறீதரன்



கடந்த வருட இறுதிப் பகுதியில் 'சூரியக்கதிர் நடவடிக்கை ஆரம்பித்ததிலிருந்து 'சத்தியவெற்றி' வரையிலான அரசின் யுத்த நடவடிக்கைகள் வடகிழக்கின் சனத்தொகைப் பரப்பில் பாரிய தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது.

பல்லாயிரம் ஆண்டுகள் நிலவி வந்த குடிசனப்பரம்பல், பொருளாதார, கல்வி கலாசார செயற்பாடுகள் பாரிய சேதங்களை அடைந்துள்ளன. கடந்த 15 வருடங்களில் இத்தகைய வேருடன் குடிபெயரும் இடம்பெயர்வுகள் வெவ்வேறளவுகளில் இடம்பெற்றுள்ளன.

1983 இன வன்முறையின்போது தென்னிலங்கையில் பரவி வாழ்ந்த தமிழ் மக்கள், தமது பாரம்பரிய பிரதேசங்களே தமக்குப் பாதுகாப்பானவை என வடகிழக்கிற்கு இடம் பெயர்ந்ததார்கள். இந்தியாவிற்கும், மேற்கு நாடுகளுக்கும் பெருமளவு தமிழர்கள் இடம்பெயர்ந்து சென்றார்கள்.

**மக்களிடம் ஆணை பெறாத விடயங்களை எல்லாம் செய்து வரும் அரசு, தீர்வுத்திட்டத்தை அமுல்படுத்துவதில் மாத்திரம் அதீத ஜனநாயகத்தைக் கடைப்பிடித்து, தீர்வுத்திட்டம் தோல்வியடைந்து செல்வதைச் சகித்துக் கொண்டிருக்கிறது; அல்லது தீர்வுத்திட்டத்தின் உள்ளடக்கத்தை குறைக்க முனைபவர்களுடன் ஒத்துப் போக முனைகிறது.**

1987 இந்திய–இலங்கை ஒப்பந்தத்திற்கு பின்னான சூழ்நிலையில் குறிப்பாக [illegible] புலம் பெயர்ந்த தமிழ் அகதிகளில் ஒரு கணிசமான பகுதியினர் நாட்டிற்குத் திரும்பினர்.

ஆனால் இந்திய–இலங்கை ஒப்பந்தத்திற்கு ஆதரவளித்த அரசியல் சக்திகளும் [illegible] 1990இல் திரும்பவும் இந்தியாவிற்கு [illegible]ளாகச் செல்லும் நிலை உருவாகியது.

பிரேமதாசா–புலிகள் [illegible] வடைந்து 2ம் கட்ட ஈழப்போர் எனப் புலிகளால் [illegible] யுத்தம் ஆரம்பித்த பின்னர், திரும்பவும் கணிசமான பகுதியினர் இந்தியாவிற்கு அகதிகளா[illegible]. அதேவேளை கொழும்பிலும் அதன் சுற்றுவட்டாரத்திலும் குடியேறியவர்களின் தொகை அதி[illegible]. 2ம் கட்ட யுத்தத்தின் ஆரமபத்துடன் வடகிழக்கிற்கான பொருளாதாரத் தடையும் ஆரம்[illegible].

அதேவேளை புலிகளின் ஜனநாயக விரோத செயற்பாடுகளினால் 1985–1986 வரை தடை செய்யப்பட்ட இயக்கங்கள் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்கு வெளியேயிருந்தும், இந்தியாவிலிருந்து செயற்படும் நிலைகளுக்கும் தள்ளப்பட்டிருந்தன.

1990இல் நடைபெற்ற இன்னுமொரு முக்கிய நிகழ்ச்சி பாரம்பரிய வடபகுதி மக்களுடன் வாழ்ந்த முஸ்லீம்கள் புலிகளினால் பலவந்தமாக வெளியேற்றப்பட்ட சம்பவமாகும்.

1977 வன்முறைக்குப் பின்னர் யாழ்ப்பாணத்திலிருந்த சிங்கள மக்களும் வெளியேறினார்கள்.

1985இன் இறுதிவாக்கில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றப் பகுதிகளில் நடைபெற்ற தாக்குதல்களால் நடைபெற்ற இடம்பெயர்வுகளும் அண்மைக்காலம் வரை இது போன்று நடைபெற்ற இடம்பெயர்வுகளும் குறிப்பாக புலிகளின் நடவடிக்கைகளாலும் பொதுவாக பல்வேறு இயக்கங்களாலும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பொதுஜன முன்னணி அரசு பதவிக்கு வந்து சமாதானப் பேச்சு வார்த்தை நடைபெற்றதன் பின்னர், 3வது கட்ட ஈழப்போர் எனக் கருதப்பட்ட யுத்தம் ஆரம்பித்தன் பின்னர்; மக்கள் முக்கியத்துவம் இழந்து போய்விட்டனர். பாரம்பரிய நிலங்களிலிருந்து ஒரேயடியாக வெளியேற்றப்படுவது என்ற நிலை தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சூழ்நிலை பிரச்சினைக்குட்பட்ட மக்கள் பகுதியினர் என்பதனை விட, இராணுவ நோக்கங்கள் யுத்தம் என்பன முதன்மை பெற்ற விடயமாகி விட்டன. இறைமை ஒருமைப்பாடு என்ற கற்பனைச் சொற்களுக்காக இங்கு யுத்தம் முதன்மைப்படுத்தப் பட்டிருக்கிறது.

அரசு தெரிவிக்கும் இறைமை, ஒருமைப்பாட்டிற்கான யுத்தம் [illegible]களைத் தாண்டி நிற்கும்போது தமிழ் மக்களின் பிரச்[illegible]க்கான தீர்வு மாத்திரம் ஜனநாயக [illegible]ளுக்குள் செய்யப்படவேண்டும் என்ற நிலைமை [illegible].

இதற்கு [illegible] காரணம் சிங்கள பேரினவாதம்தான். சிங்களப் பேரினவா[illegible], ஒரு யுத்தம் பற்றிய விடயத்தில் [illegible] மற்ற விதத்தில் ஒத்துழைக்கும். ஆனால் இனப் பிரச்சினை [illegible] என்று வரும் போது அது கேள்வி எழுப்பும். எதை [illegible] கொடுக்கத் தேவையில்லை என்றும் [illegible].

சிறுபான்மையின [illegible]க்கள் பட்டினி [illegible]ந்தால் என்ன? அவர்களுடைய உயிர் [illegible] இழக்கப்பட்டால் என்ன? யுத்தத்தில் வெற்றி [illegible] பெருமகிழ்ச்சியே என்ற உள்ள[illegible]தான் இங்கு [illegible] நிற்கிறது.

நாம் யுத்தம் நடத்திக் கொண்டே பாதிக்கப்பட்டவர்களுக்கு உணவு அனுப்புகிறோம் என்ற அரசின் கூற்று, அன்னியர்களுக்கும் பரிவு காட்டுகிறோம் என்ற மறைமுகக் கருத்தையும் கொண்டிருக்கிறது

இதேபோல் தீர்வுத்திட்டம் பற்றி தமிழ்க் கட்சிகளிடம் பேசுகிறோம்; தமிழ் மக்களிடம் பேசுகிறோம்; சிங்கள மக்கள் மத்தியில் பேசுகிறோம்; நாம் ஜனநாயக பூர்வமான வழிகளில் பிரச்சினைகளைத் தீர்க்க முனைகிறோம்என்றும் அரசு பேசுகிறது.

யுத்தச் செய்திகள் தணிக்கைக் குட்படுத்தப்பட்டுள்ளன. ஆனால் அரசின் கட்டுப்பாட்டிலுள்ள கட்டுப்பாட்டிலில்லாத தகவல் தொடர்புச் சாதனங்களில் இராணுவ வெற்றிகள் பற்றிய செய்திகளே பிரமாதமாகப் பேசப்படுகின்றன. யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் பிரச்சினைகள் வெளியே வருவதில்லை.

யுத்தம் அதன் விதிமுறைகளை மீறி நடைபெறுகின்றது. மனித உரிமைகளின் மீறல்கள் கூட தாராளமாக நடைபெறுகின்றன.

ஆனால் தீர்வுத் திட்டத்தை அமுலாக்குவதில் மாத்திரம் எதிர்க் கட்சி, பிக்குகள், பேரினவாதிகள் எல்லோருடைய அபிப்பிராயமும் கேட்கப்படுகின்றது.

அரசு தனது அதிகாரத்தைப் பாவித்து நாட்டின் இறைமை, ஒருமைப்பாட்டைப் பாதுகாப்பதற்கு யுத்தம் புரிகிறது.

இதே அரசு பதவிக்கு வருவதற்கு முன் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான ஒரு ஆணையை மக்களிடம் பெற்றிருக்கிறது.

ஆனால், இரண்டாவதாகக் கூறப்பட்ட விடயத்தை அமுல்படுத்துவதில் மாத்திரம் அதீத ஜனநாயகத்தைக் கடைப்பிடிக்கிறது. தீர்வை அமுல்படுத்துவதற்கு ஒத்துழைப்பவர்கள் எல்லோரையும் சேர்த்து, ஏன்-சம்பிரதாயங்களை மீறி அரசு தீர்வுத் திட்டத்தை அமுல்படுத்த முடியாது?

இந்த அரசு பதவிக்கு வருவதற்கு முன் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை இல்லாதொழிப்போம் என்று கூறியிருந்தது. ஆனால் பாராளுமன்றப் பலம் குறிப்பிடத்தக்கதாக இல்லாத நிலையில் ஜனாதிபதி பதவி நீடிக்கப்பட்டுள்ளது.

யுத்த நடவடிக்கைகளைக் குறைப்போம் என்ற அரசு யுத்த நடவடிக்கைகளை புதிய சூழ்நிலைகளில் அதிகரிக்க வேண்டியேற்பட்டது.

இவையெல்லாம் மக்களிடம் ஆணைபெற்ற விடயங்கள் அல்ல. ஆனால் தீர்வுத்திட்டத்தை அமுல்படுத்துவதில் மாத்திரம் அதீத ஜனநாயகத்தைக் கடைப்பிடித்து, தீர்வுத்திட்டம் தோல்வியடைந்து செல்வதைச் சகித்துக் கொண்டிருக்கிறது; அல்லது தீர்வுத்திட்டத்தின் உள்ளடக்கத்தை குறைக்க முனைபவர்களுடன் ஒத்துப் போக முனைகிறது.

பிரச்சினை இங்குதான் மையம் கொண்டுள்ளது. அதாவது பிரச்சினையைத் தீர்ப்பதற்கான துணிச்சல் பேரினவாதத்திற்கு அடிபணியும் நிலை இங்குதான் எதிர்பார்க்கப் படுகிறது.

இதனைச் சரிவரச் செய்யாத, யுத்தமுனைப்பு பிரதானப்படுத்தப் பட்டுவிட்ட நிலையில், தமிழ் மக்கள் மத்தியில் இருக்கும் பயங்கரவாதம் ஒழிக்கப்படக்கூடியதுதானா என்பதையும் இங்கு சிந்திக்க வேண்டும்.

வடக்கு கிழக்கு பிரதேசங்களில் மக்களின் உயிர் உடமைப் பாதுகாப்பு, உரிமைகளை வழங்குதல் என்ற வேலைத்திட்டமும், யுத்த வேலைத்திட்டமும் பாரிய இடைவெளியைக் கொண்டதாகவும் முரண்பாட்டைக் கொண்டதாகவும் பாரபட்சத்தைக் கொண்டதாகவுமே காணப்படுகிறது.

எனவேதான் ஒடுக்கப்பட்ட சிறுபான்மைஇனங்களின் நலன்களைப் பாதுகாப்பதற்கான பொறுப்பை ஒரேயடியாக இந்த அரச!னால் செய்ய முடியாதென்கிறோம்.

அதற்கு மாற்றாக அரசுக்கும் தமிழ் மக்களுக்குமிடையே மத்தியஸ்தம் வகிப்பதற்கு மூன்றாவது சக்தியொன்று இங்கு தேவைப்படுகிறது. அந்த சக்தி, இந்த நாட்டில் வாழும் எல்லா இன மக்களினதும் நலன்களிலும் அக்கறை கொண்டதாக இருக்க வேண்டும்.

## குருஸ் அண்ணனுக்கு...

சோக மேகங்கள் சூழ்ந்துள்ள
நம் தேசத்தில்....
கனவுகள் கவிதையென
எழுதுகின்ற கவிஞர்களில்
நீயில்லை.... நீயில்லை....
புதிய சிந்தனையை நீ விதைக்க
வாளாய் எழுந்தன உம் கவிவரிகள்....
இந்த தெருக்களெங்கும்
உமது முகமாய் பிரதியிடும்!
கொட்டாவி விட்டோரும்
உமது பேச்சோசை கேட்டு
சோம்பல் முறித்த காலமிருந்தது....
தமிழ் உணர்வுகளுக்கு
ஒத்தடம் கொடுத்தன உமது வரிகள்....
ஆறு தசாப்தங்களாய்
நீ வாழ்ந்த வாழ்க்கை நிலைத்திருக்கும்
தடங்கள் மாறியதால்
சிதறடிக்கப்பட்ட சித்திரம் நீ!
ஆனாலும்.... ஆனாலும்....
இனிவரும் கவிஞனுக்கு
உமது வழி முகவுரையே!
உமது செயலுக்கும்.... நேசத்துக்கும்
இதுவே எமது இறுதி அஞ்சலி!




தமிழ்மக்களை அரசியல்ரீதியாக அணிதிரட்ட செயற்பட்டவர். சிறந்த பேச்சாளர். கவிஞரும் கூட. 1950களில் மட்டக்களப்பில் தமிழரசுக் கட்சியின் வளர்ச்சியோடு ஆரம்பமான அரசியல் வாழ்க்கை. 1983இற்குப் பிறகு ஏற்பட்ட சூழலில், போராட்ட அமைப்புகளின் மூலமே தமிழ் மக்களின் விடுதலையைப் பெறமுடியும் என்று சொல்லோடும் செயலோடும் இயங்கியவர். கிழக்கில் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயற்பாடுகளிலும் வளர்ச்சியிலும் இறுதிவரை பங்கேற்றவர். சமூகப் பெரியார்கள், புத்திஜீவிகள், கலைஞர்களெல்லாம் அரசியலைக் கண்டு அஞ்சியோடிய வேளையில் துணிந்து நியாயத்திற்காக செயற்பட்ட பெரிய மனிதர். திரு. எ. அற்புத ராஜா குருஸ் அவர்கள் 08.09.1996 அன்று காலமானார்.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி EPRLF

22, வெளிவட்ட வீதி, வவுனியா சுரேஷ் பிரேமச்சந்திரன் அவர்களால் இரததனப்பிட்டிய CRC அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

படிப்பகம்